பக்கங்கள்-16 | 29.ஐப்பசி.2023 | விலை-30.00








# தினப்புயல்

PIN news THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06








மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 419




# சர்வதேச விசாரணை தேவையற்றது எனக் கூறுவது ஆச்சரியப்படத்தக்க விடயமல்ல

## – முன்னாள் இலங்கை மனித உரிமை ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன்




# தமிழ் இன அழிப்பின் சாட்சியங்களைச் சொல்லத்துடிக்கும் மனிதப் புதைகுழிகள்

# நோகாமல் போராடும் கட்சிகளின் கடையடைப்பு? – நிலாந்தன்

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# சர்வதேச விசாரணை தேவையற்றது எனக்கூறுவது ஆச்சரியப்படத்தக்க விடயமல்ல

## முன்னாள் இலங்கை மனித உரிமை ஆணையாளர், சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்



**கேள்வி :- தமிழ் மக்கள் சர்வதேச விசாரணையின் மூலம் தான் தமக்கான நீதியினைக் கோரி நிற்க. அண்மையில் இந்த நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் சர்வதேச ஊடகமொன்றுக்கு. இந்த நாட்டில் சர்வதேச விசாரணை இடம்பெறாது என்கிற அடிப்படையில் கருத்துத் தெரிவித்திருந்தார். அவர் ஏன் இவ்வாறு கூறினார்?**

பதில் : நாட்டின் ஜனாதிபதி ஏன் அவ்வாறு கூறினார் என்பதை விட அவர் அப்படிக் கூறியது ஆச்சரியத்திற்குரிய விடயமல்ல என்றுதான் நான் கூறுவேன். சிலர் ஆச்சரியப்படலாம் ஏனென்றால் அவர் நல்லாட்சி காலத்தில் பிரதமராக பதவி வகித்தபோது ஐ.நா மனித உரிமைப்பேரவையில் பிரகடனத்தை ஐ.நாவுடன் இணைந்து முன்வைத்தது. அந்த நேரத்தில் தான் அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்தையும் ஸ்தாபித்தார்கள். என்னைப் பொறுத்தளவில் நல்லாட்சி காலத்தில் அவர் அல்லது அவரது அரசாங்கம் இவ்வாறு செய்திருந்தாலும் தற்போதைய ஜனாதிபதி ஆட்சிக்கு வந்தது மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தின் கட்சியின் வாக்குகளால் தான் பாராளுமன்றத்தால் அவர் ஜனாதிபதியாக ஆக்கப்பட்டார். அதன் பின் அவரது செயற்பாடுகள் ஒரு சர்வாதிகாரப் போக்கில் இருக்கின்றது.

ஏனென்றால் அவர்கள் இலங்கையில் விதவிதமான சட்டங்களைக் கொண்டுவந்து பேச்சுச் சுதந்திரத்தை முடக்கப் பார்க்கின்றார்கள். அதாவது நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டம். பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டம் என. இவற்றை விட போராட்டங்களுக்குத் தடை விதிக்கின்றார்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டங்களுக்குத் தடைவிதிக்கின்றார்கள். ஏனைய குழுக்கள் போராட்டம் செய்தால் நீதிமன்றத்தினை நாடுவதன் ஊடாக போராட்டங்களுக்கானத் தடையுத்தரவினைப் பெற்றுக் கொண்டு. அராஜகங்களில் ஈடுபட்டும் வருகின்றார்கள்.

ஆகவே ஒவ்வொரு விதத்திலும் பேச்சுச் சுதந்திரம், மாற்றுக்கருத்துக்களை அரச தரப்பினர் முடக்கப்பார்க்கிறார்கள்.

தற்போது பொலிஸ் மா அதிபரை புதிதாக நியமிக்காமல் விட்டதற்கான காரணம் எமக்குத் தெரியும். ஏனென்றால் பட்டியலில் உள்ள இரண்டு மூன்று நபர்கள் மீது மிக மோசமான குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. அந்தக் குற்றச் சாட்டுக்கள் பற்றி அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்கள் இன்னமும் பதவிகளில் இருக்கிறார்கள். அந்த மாதிரியான ஒரு அரசாங்கம் தான் இது. ஆகையால் ஜனாதிபதி சர்வதேச விசாரணை தொடர்பில் கூறிய கருத்து ஆச்சரியப்படத்தக்க விடயமல்ல.

**கேள்வி : கிடப்பில் போடப்பட்டுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கானத் தீர்வு விடயம் என்னவாகப் போகின்றது? சர்வதேச விசாரணையை புறக்கணித்துவரும் அரசு உள்ளூர் விசாரணை. ஆணைக்குழு அமைக்கிறோன் என பல பொய்களைக் கூறியது. இது குறித்து?**

பதில் :- உண்மையில் நல்ல கேள்வி. தற்போது உள்நாட்டு பொறிமுறைகள் பல உருவாக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. காணாமல் ஆக்கப்பட்டோரை இனங்காண்பதற்காக அலுவலகங்கள் உருவாக்கப்பட்டன. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினை மஹிந்த ராஜபக்ச அவர்கள் யுத்தத்தின் பின்னர் ஸ்தாபித்தார். நாம் அந்த ஆணைக்குழுவின் அறிக்கையினைப் பார்த்தால் பல முற்போக்கான பரிந்துரைகள் உள்ளன. சில பிரச்சினைகள் உள்ளன. ஆனால் அந்தப் பரிந்துரைகள் கூட நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இலங்கையின் பொறுப்புக்கூறல் என்பது உள்நாட்டுப் பொறிமுறையால் நடக்கப்போவதில்லை. ஏனென்றால் உதாரணமாக நாம் ஒரு வழக்கினை தாக்கல் செய்ய வேண்டுமாகவிருந்தால் முதலில் பொலிஸாரிடம் செல்லவேண்டும். பொலிஸார் சுயாதீனமானவர்களா? இல்லை. அரசியல் மயமாக்கப்பட்ட ஒரு பொறிமுறை அது. அதற்குப் பின் இருக்கும் உயர்மட்ட அதிகாரிகள் மீது கூட பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. அதனைக் கூட விசாரிப்பதில்லை. அவர்கள் இன்னமும் பதவியில் இருக்கின்றார்கள். அதன் பின்னர் நாம் சட்டமா அதிபர் திணைக்களத்தை எடுத்துக்கொள்வோம். பல தசாப்தங்களாக கூறப்பட்டது என்னவென்றால் அது ஒரு சுயாதீனமற்ற திணைக்களம் என்று. அவர்கள் சட்டப்படி கூட குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்கின்றார்கள். அதேநேரம் அரசாங்கத்தின் சார்பாக வழக்குகளிலும் ஆஜராகின்றார்கள். இதனால் அவர்கள் எவ்வாறு வழக்குத் தொடுக்கலாம் என்கிற ஒரு முரண்பாடு நிலவுகிறது. அரசாங்கத்தின் சார்பானவர்கள் இராணுவத்தினருக்கு எதிராக எவ்வாறு குற்றம்சாட்டுவது என்கிற குழப்பம் தொடர்கின்றது.

இந்த சூழ்நிலையில் உள் நாட்டில் நீதி கிடைக்குமா இல்லை. உள்நாட்டில் பொறுப்புக்கூறல் நடக்கப்போவதில்லை. ஆகவே உள்நாட்டுப் பொறிமுறை சரிவராது. பலர் கூறுகின்றார்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம். அங்கும் பிரச்சினைகளைக் கொண்டுசெல்வது கடினம். ஏனெனில் இலங்கை கைச்சாத்திடவில்லை. ஐ.நாவின் பாதுகாப்புச் சபையின் ஊடாகத்தான் ஒரு நாடு கைச்சாத்திடாமல் விட்டால் அவர்களை சர்வதேச நீதிமன்றத்திற்கு அனுப்பமுடியும். அது நடக்கப்போவதில்லை. ஏனென்றால் ரஸ்யா மற்றையது சீனா. அது பழைய கதையாகும்.

வேறு நாடுகள் இங்கு மனிதஉரிமைமீறல், போர்க்குற்றங்கள் என குற்றம்சாட்டப்பட்டவர்கள் தங்கள் நாடுகளின் சட்டங்களைப் பாவித்து இவர்களுக்குடாக வழக்குத் தொடுக்கலாம். இவ்விடயம் ஏற்கனவே நடந்துள்ளது. ஜேர்மனி மற்றும் ஈராக் போன்ற நாடுகளில் குற்றம் புரிந்தவர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகையால் இது ஒரு வழிமுறை. தற்போதைய பூகோள அரசியலைப் பார்க்கும் போது இஸ்ரேல் - காசாவில் நடக்கும் யுத்தம் கூட பல மாற்றங்களைக் கொண்டுவரப் போகின்றது.

இலங்கையில் நடந்த போர்க்குற்றங்களுக்காக சர்வதேச மட்டத்திலான ஒரு பொறிமுறை ஸ்தாபிக்கப்படப்போவதில்லை. பூகோள அரசியல் மற்றையது நிதி வளம் இவையே இதற்குரிய காரணியாகும். உகாண்டா மற்றும் யூகோஸ்லாவியாவில் நடந்த குற்றங்களுக்காக எல்லாம் ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் அங்கு குற்றவாளிகளாக இனங்காணப்பட்டவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. புல வருடங்களாக அவர்கள் செயற்பட்டும் தொடுத்த வழக்குகள் என்பது மிக மிகக் குறைவு. இவர்கள் ஏனைய நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்கின்றபோது அந்தந்த நாட்டுச் சட்டங்களின் பிரகாரம் அவர்களை குற்றஞ்சாட்டி அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். வழக்குத் தொடுக்கலாம்.

**(தொடரும்...)**

**நேர்காணல் : இரணியன்**





தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## பௌத்த துறவிகளின் செயற்பாட்டால் ஆபத்தில் நாடு

இந்த நாட்டில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக யுத்தம் நடைபெற்றதற்கும். இந்த நாடு பொருளாதார ரீதியாக பின்தங்கிப் போய்க் கொண்டிருப்பதற்கும். ஜனநாயக விழுமியங்களை மதித்து செயற்படாமைக்கும். அமைதியை இழந்து மக்கள் பாதுகாப்பின்மையை உணர்வதற்கும் அடிப்படைக் காரணமே இந்த பௌத்தத் துறவிகள் தான்.

இனவாதக் கருத்துக்களைப் பேசி நாடு முழுவதிலும் விகாரைகளை அமைத்துக்கொண்டு சொகுசு வாகனங்களில் வலம் வரும் இவர்களில் பலர். அன்றிலிருந்து இன்றுவரை இனவாதக் கருத்துக்களை பரப்பி வருகின்றனர். அதனை ஒரு தொழிலாகச் செய்து வருகின்றனர்.

இந்நாட்டில் வாழும் மூவின மக்களையும் எந்த நேரமும் குழப்பிக்கொண்டே இருக்கவேண்டும் என்பது இவர்களின் நோக்கம். ஒற்றுமையாக மக்கள் வாழ்வது இவர்களுக்குப் பிரச்சினை. தமது மதம் பௌத்தம் எனக் கூறிக்கொள்ளும் இவர்கள். இந்த நாட்டில் பௌத்தம் மட்டும் மேலோங்கியிருக்கவேண்டும். தாம் சொல்வது தான் இந்த நாட்டில் சட்டம். தம்மை மீறி யாரும் செயற்படக்கூடாது. நீதிமன்றத்தினையோ அல்லது பொலிசாரினையோ நாம் மதிக்கமாட்டோம். பொலிசார் எப்பொழுதும் தமக்கு பாதுகாப்பு வழங்கவேண்டும். ஜனாதிபதி நாம் சொல்வதைக் கேட்கவேண்டும். நாம் இந்த நாட்டில் எதுவும் செய்வோம். ஏனைய தமிழர் மற்றும் முஸ்லீம்கள் இவர்கள் செய்யும் அடாவடித்தனங்களைத் தட்டிக்கேட்டால் வெட்டுவோம். கொலை செய்வோம் என மிரட்டுவதும். அடிதடியில் ஈடுபடுவதும் என மட்டக்களப்பில் சுகபோக வாழ்க்கையினை வாழ்ந்துவரும் அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் என்கிற ஒரு காவி உடை தரித்த பௌத்த துறவி மற்றும் இவரையொத்த ஞானசார தேரர் என்கிற இருவதும் இந்த நாட்டுக்கு பாரிய ஆபத்தானவர்கள்.

எந்த அரச அதிகாரிகளும் இவர்களிடம் எதிர்த்து கேள்வி கேட்க முடியவில்லை. தமிழ் மற்றும் முஸ்லீம் மக்களுக்கு எதிராக அராஜக நடவடிக்கைகளில் தொடர்ந்தும் இவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்குப் பாதுகாப்பாக பொலிசாரும். அரசும் உடந்தையாக இருப்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இனவாதம் பேசி மக்களைக் குழப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் இவ்வாறான பௌத்த துறவிகளை அரசாங்கமும் பொலிசாரும் கண்டுகொள்ளாமல் இருப்பதற்கான காரணம் என்ன?

பாராளுமன்றிலும் வெளிப் படையாக இனவாதம் பேசி மக்களைக் குழப்பும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் காண்கிறோம். இவ்வாறான தரப்பினரால் நாட்டுக்கு எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை. இது ஒரு பௌத்த நாடு எனக்கூறிக்கொண்டு. நிறைவேற்றதிகாரத்தினையும் கைவசம் வைத்துக்கொண்டு. இந்த நாட்டில் தாம் தான் எல்லாம் என்கிற மமதையில் வலம் வருபவர்களால். இந்த நாடு மேலும் மேலும் பின்நோக்கித்தான் போகுமேயொழிய. முன்னோக்கிச் செல்லாது.



பல்துறை எழுத்தாளர்
புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்

# கல்லறைப் பூக்கள்



19

தவளையாக வாழ்ந்துவிட்டதாக தன்னைத் தானே நொந்து கொண்டான். குடி நீருக்கு, சாப்பாட்டுக்கு, உடற்கழிவுகளை வெளியேற்றுவதற்கு, வெளியில் போவதற்கு அனுமதி எடுப்பதற்கு எல்லா விடயத்திற்கும் பால் வயது வேறுபாடுகள் இன்றி வரிசை வரிசையாக நின்ற, சாத்தை எதிர்கால வாழ்க்கை விளையாட்டில் விளையாட்டு வீரனுக்கான அத்திவாரத்தை இட்டது.

புதிய பேருந்து ஒன்று வெறுமையாக வந்து, முகாமின் வாயில் நின்றது. பெயர் வாசிக்கப்பட்ட யுவதிகளும் இளைஞர்களும் அதில் ஏற்றப்பட்டார்கள். திடீரென்று பேருந்தின் இரு கதவுகளும் இறுகப் பூட்டப்பட்டன. சீருடையுடன் ஆயத்தமாக நின்ற சாரதி விரைவாக பேருந்தை மாயமாக மறைத்தான். யுவதிகள் இளைஞர்களின் உறவினர்களும் பெற்றோர்களும் கதறும் சப்தம் மறைந்தவர்களைத் தேடிச் சென்றது.

புதிதாகவந்து இறங்கியவர்களில் அநேகர் தொலைக்காட்சிப் பெட்டியில் மூழ்கிப் போயிருந்தமையால், இவ்வாறான சம்பவங்களை அவர்கள் காணவுமில்லை. ஊகிக்கவுமில்லை. அதிக கற்பனா சக்தியும் சமூக அவதானிப்பும் சவால்களை எதிர்த்து போராடும் மனப்பக்குவமும் கொண்ட சாத் இவற்றையெல்லாம் ஊகித்துக்கொண்டான். இவ்வாறான விடங்களை சிறிய வயதில் பெரியோர்கள் கூற கேள்விப்பட்டதை இப்போது நேரில் பார்க்கின்றான். வேறொன்றும் புதிய விடயமல்ல.

திடீரென்று 'டி.வி.கோல்' வந்த கிராம உத்தியோகத்தரும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாயும் (முகாம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி) ஒரே பேருந்தில் ஒன்றாக வந்தவர்கள் தனித் தனி குடும்பங்களாகப் பிரித்து, நூறு அடி நீளத்தில் திறந்த வெளியாக காட்சியளித்த மண்டபத்தில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பத்து சதுர அடி இடத்தைக் கொடுத்தார்கள். ஒன்று இரண்டு மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு ஓரளவுக்கு இந்த இடம் பொருத்தப்பாடு கொண்டது. ஆறு ஏழு எட்டு உருப்படிகளைக் கொண்ட குடும்பங்களுக்கு இது எவ்வாறு சாத்தியமாகும்.

தனி மனிதனாக இருந்து சமூகத்தில் பல போராட்டங்களை எதிர்கொள்வதற்கு ஒரு கிழமை முகாம் வாழ்க்கை கற்றுக்கொடுத்துவிட்டது. ஒரு நாட்டுக்குள் இன்னுமொரு நாட்டைக் கண்ட உணர்வு. தான் இவ்வளவு காலமாகவும் கிணற்றுத் தவளையாக வாழ்ந்துவிட்டதாக தன்னைத் தானே நொந்து கொண்டான்.

முகாமுக்குள் சற்று தனிமையில் காலைக் கடன்களை முடிப்பதாக இருந்தால், அதிகாலையில் துயில் எழுந்து, ஆளை ஆள் தெரியாத இருளில் செல்ல வேண்டும். அவ்வாறு செல்லும் போது, முதலில் அவர்கள் செய்வது முகாமின் பொலிஸ் நிலையத்தின் முன் தொங்கவிடப்பட்டுள்ள குறிப்பு பலகையைப் பார்ப்பது. அவ்வேளை அறிமுகம் இல்லாதவர்களும் ஒருவரை ஒருவர் நெருங்கி தமக்குள் கதைத்துக்கொள்வார்கள். சாத் முகாமுக்குள் சென்று, ஆறாம் நாள் பிறந்தது.

"தம்பி எந்த இடம்?" - நடுத்தர வயதையுடையவரின் பார்வையும் வார்த்தையும் சாத்தின் மீது விழுந்தன.

"யாழ்ப்பாணந்தான், இப்போ மாங்குளந்தான்"

"என்ற மகனைக் கனடாவுக்குக் அனுப்புவம் என்று முல்லைத் தீவிலிருந்து வந்து, ஆறு மாதங்களாக இஞ்ச நானும் மகனும் கிடக்கிறம்"

"அட பாவமே!!!?..." - சாத்துக்கு வாழ்க்கை விளையாட்டில் விளை யாடுவதற்கு இந்த கதை மேலும் உறுதுணையக இருந்தது.

"தம்பி எங்க போறீங்க?"

" 'கெம்பஸ்'க்கு"

குறிப்புப் பலகையின் முன் பெரிய கூட்டம் கூடுவது வழமை. கொழும்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் - பல இடங்களுக்குப் போகின்றவர்களும் நிரந்தரமாக முகாமை விட்டு, வெலியில் 'ரிலிஸ்' ஆகி செல்பவர்களும் இராணுவத்திடமும் பொலிஷாரிடமும் புலனாய்வுத் துறையினரிடமும் நேர்முகத் தேர்வை முடித்துவிட்டு அதன் பெறுபேறுகளுக்காக இந்தப் பெயர்ப் பலகையில் தங்களது பெயர்களைப் பார்த்து, பல காலம் ஏங்குபவர்கள் பலர். அவ்வாறு ஏங்கி தங்களின் பெயர்கள் வெளிவராமல் காணாமல் போனவர்களும் ஏராளம்.

ஐயா அரச வைத்தியசாலையில் நீண்ட காலம் மருந்தாளராக இருந்து ஓய்வு பெற்றவர்.

"தம்பி எந்த 'பெக்கல்ட்'டி" - தனது மூக்குக் கண்ணாடியை வலக் கரத்தினால், மேலே தள்ளி விட்டார்.

ஐயாவின் முன்னுக்கு நின்று எட்டிப் பார்த்து தனது பெயரைத் தேடிய சாத், " 'மெடிஸின் பெக்கல்ட்டி'" - லாவகமாக பதில் கூறினான்.

"தம்பி என்னுடைய பெயர் வேதநாயகன். மகன்ர பெயர் மயில் வாகனம் பெயர் கிடக்குதா? என்று ஒருக்கா பாத்துச் சொல்லு"

"பொட்டில்' இருக்கும் எழுபத்தைந்து 'ரிலிஸ்' ஆனவர்களின் பெயரில் இல்லை ஐயா"

"உன்ர பெயர்?"

"இருக்கு"

"எப்ப போக?"

"நாளைக்கு காலையில் போக"

"படிக்கப் போறவங்கட பெயர் எப்படியும் விசாரணை முடிந்து ஒரு கிழமைக்குள்ள 'பொட்டில்' வெளி வந்திரும்"

"ஐயா நீங்க மாதக் கணக்கில் முகாமில் இருக்கிங்கள் 'ஒ.ஐ.சி.' யுடன் கதைச்சி பாக்கலாந்தானே?

"எத்தனை தடவை தம்பி கதைச்சாச்சு. ஒன்று இரண்டு லச்சத்தை கையில் வைச்சா முகாமுக்கு வந்து அடுத்த நாள் வெளியில் போகலாம். நான் இஞ்ச வந்த காலம் முதல் இப்ப இருக்குற 'ஒ.ஐ.சி. மூன்றாவது ஆள்"

"எல்லாம் பணத்துக்காக லஞ்சமும் ஊழலுந்தான் மிச்சம். புத்தகத்தில் படிச்சிருக்கன். பெரியோர் சொல்ல கேள்வி பட்டிருக்கன் இப்பதான் நேரில் பாத்திருக்கன்"

"தம்பி இப்பதானே ஆரம்பம் போகப் போகத் தெரியும். நீங்களும் படிச்சு வைத்தியனாக வந்த பிறகு பழசெல்லாம் மறந்துட்டு இப்படித்தான் செய்யப் போறீங்க"

"அப்படி இல்லை ஐயா? உலகத்தில் நல்ல வங்களும் இருக்காங்கள்"

"நீ அப்படி இருந்த நல்லம்"

"நீங்க இருந்து பாருங்களே?"

"இப்பவே வயசு எழுபது ஆச்சி. நான் எங்க தம்பி பார்க்கப் போறன். என்ர காலம் எல்லாம் போச்சு"

"கவலை பட வேண்டாம்"

"எப்படி தம்பி கவலை படாமல் இருக்கிறது.?" இந்த யுதத்தில் எவ்வளவு உறவுகளையும் உடமைகளையும் இழந்தாச்சு. கடைசியில் நானும் மகனும் தான் மிச்சம். அவனுக்கும் முப்பத்தொன்பது வயசாச்சி. வாழ்க்கையில் நல்லது ஏதும் நடக்க வில்லை"

"அப்பா.. அப்பா... விடியவெள்ளன அழத் தொடங்கிற்றியா.? - எங்கிருந்தோ மகன் மயில் வாகனத்தின் குரல் ஒலித்ததும்.

"தம்பி கவனமாக போயிற்று வா. என்ர மகன் கூப்பிடுறான். நான் போயிட்டு வாறன்."

"சரி ஐயா"

"நாளைக்கு வழியனுப்ப வாறன்"

கிழக்கு வானம் மெல்ல மெல்ல ஒளியைக் கக்குகின்றது. புகையிரத நிலையத்தில் கொழும்பிலிருந்து வந்து நிற்கும் புகையிரதம் வெளியிட்ட புகையினால், அதிகாலை சற்று கடும் இருள் சூழ்ந்து ஒளி மறைகின்றது. போர்க்களத்தின் முன் அரண்களுக்குச் செல்லும் கவச வாகனங்களின் இரைச்சல் சூழலில் அனைவரையும் அச்சம் கொள்ள வைத்தது. ஆஸ்துமா நோய்க்கு உள்ளாகிய பெண்ணை உடல் உறவுக்கு அழைத்து, ஓர் ஆடவன் உடலுறவு கொள்வது போல, ஆடவர்கள் சிலர் பயத்தை உணர்கின்றனர்.

முகாமின் மண்டபங்களின் மூலைகளில் கட்டப்பட்ட ஒலிபெருக்கி, "ஆயுபோவான், வணக்கம், குட்மேனிங் இப்ப ரிங்கோவுக்குக் கப்பலுக்குப் போறவங்களும் கொழும்பில எயாபோட்டுக்குப் போறவங்களும் வெளியில் ரிலிஸாகி போறவங்களும் கேட்க, றவலிங் செலவு, தங்குமி செலவு, கேம செலவு ஒக்கம உங்களுடையது. நீங்க எந்த மாவட்டத்துக்குப் போறீங்களோ அங்க கிராம நிலதாரிக்கிட்டயும் பொலிஷ் நிலையத்திலும் கட்டாயம் பதிஞ்சு வேண்டும். உங்களுக்குத் தரப்படும் வண்டே பாஸில் வெளியில் போக வேண்டும். அப்படி போகாட்டி இன்னுமொருக்கா கிளியரன்ஸ் போட்டு பாஸ் எடுக்கனும். ஸ்துதி"

சிங்களத்தைத் தாய்மொழியாக கொண்ட பொலிஷின் குரல் கெஷட் ஒலி நாடாவில் பதியப்பட்டுப் ஒலி பரப்பப்பட்டது.

நேரம் காலை ஐந்தரை மணியைத் தாண்டிக் கொண்டிருந்தது. குடும்பம் குடும்பமாகவும் தனி நபர்களாகவும் தங்களுடைய பயணப் பைகளுடன், முகாமை விட்டு வெளி வீதியில் இறங்கிய மக்கள் வவுனியா மத்திய பேருந்து நிலையத்தை நோக்கி, நடந்தும் வாடகை வாகனங்களிலும் பயணமாகினார்கள்.

தொடரும்...

# "தமிழ் இன அழிப்பின் சாட்சியங்களைச் சொல்லத்துடிக்கும் மனிதப் புதைகுழிகள்"




பௌத்த பேரினவாத சிங்கள அரசு இலங்கையில் 75 ஆண்டுகளுக்கு மேலாக, தமிழர்களை முற்றாக அழிப்பதை நோக்காகக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்பட்டுவரும் செயல்பாடே இன அழிப்பு ஆகும். மனிதக் குழு ஒன்றினை முற்றாக ஒழிக்கும் முயற்சியுடன், அவர்களை முற்றாக அழிப்பதை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் செயல்பாடே இனப்படுகொலை எனப்படுகிறது இது "ஜெனோசைட்" (Genocide) என ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிறது.

இனப்படுகொலை (Genocide) என்ற வார்த்தையை முதன் முதலில் ரபேல் லேம்கின் என்பவர் 1944ல் வெளிவந்த "Axis Rule in Occupied Europe" என்ற புத்தகத்தில் பயன்படுத்தியுள்ளார். ஜெனோசைட்டில் வரும் முதல் பாதி சொல்லான "ஜெனொஸ்" என்பது கிரேக்கச் சொல் ஆகும். அது "இனம்" அல்லது பழங்குடி என்ற பொருள் தருகிறது. "சைட்" எனப்படும் இலத்தின் சொல் "கொல்வதற்கு" என்ற பொருள் தருகிறது. இந்த இரண்டும் சேர்ந்தே "ஜெனொசைட்" என்ற வார்த்தை உருவானது.

யூத இனப்படுகொலையின் போது தனது சகோதரன் தவிர குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் இழந்த ரஃபேல், இனப்படுகொலை சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றமாக இனங்காணப்பட வேண்டும் என பிரச்சாரங்களை முன்னெடுத்து வந்தார். இதனை அடுத்து 1948 டிசம்பரில் இனப்படுகொலை குறித்த ஐ.நா தீர்மானத்தில் இது உள்வாங்கப்பட்டு பின்னர் 1951 ஜனவரியில் நடைமுறைக்கு வந்தது. ஒரு இனக் குழுவின் உறுப்பினர்களைக் கொல்வது குழுவின் உறுப்பினர்களுக்கு உடல் மற்றும் உள ரீதியாக மோசமான தீங்கினை ஏற்படுத்துவது இனப் படுகொலையாகக் கருதப்படுகிறது. அந்த இனக் குழுவில் புதிதாகப் பிறப்புக்களைத் தடுக்கும் நோக்கில் செயற்படுவது, குழந்தைகளை வலுக்கட்டாயமாகவேறொரு இனக்குழுவுடன் சேர்ப்பது, ஒரு தேசிய இனத்தை அல்லது சமய குழுவை முழுதாகவோ அல்லது பகுதியாகவோ அழிப்பதை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் இனப்படுகொலை என ஐ.நா தீர்மானத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக, தடுப்பு நடவடிக்கைகள் Responsibility to Protect எனும் சர்வதேச கோட்பாட்டுக்கு அடித்தளமாக அமைகின்றன. 2005ன் உலக உச்சி மாநாட்டில் (2005 World Summit), உறுப்பு நாடுகள் இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், இன அழிப்பு மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் அவற்றின் தூண்டுதலிலிருந்து தங்கள் மக்களை பாதுகாப்பதற்கு உறுதி பூண்டன. குறிப்பாக, இப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நாடுகளுக்கு உதவி தேவைப்படும் போது, சர்வதேச சமூகம் அவர்களுக்கு உதவத் தயாராக இருக்க வேண்டும் என்றும் இதுபோன்ற குற்றங்களிலிருந்து தங்கள் மக்களைப் பாதுகாக்க அரசாங்கங்கள் தவறினால், ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்திற்கு அமைவாக, சர்வதேச சமூகம் கூட்டாகச் செயல்படவேண்டும் என்றும் இக் கோட்பாட்டின் ஊடாக நாடுகள் உறுதி எடுத்துக் கொண்டன. இது சர்வதேச சட்டத்திலும் இனப்படுகொலை உடன்படிக்கையிலும் ஆழமாக வேரூன்றியுள்ளது.

மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள், இனச்சுத்திகரிப்பு, யுத்தக் குற்றங்கள், இனப்படுகொலை போன்றவற்றிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கும் பொறுப்புத் தொடர்பாக 2005 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை பொதுச்சபை தீர்மானங்களின் பந்திகள், 138 மற்றும் 139 ஆகிய இரண்டும் எடுத்துக் கூறுகின்றன. இப்பந்திகள் இரண்டும் 2006 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 28ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 1674 ஆம் இலக்கத் தீர்மானத்தின் மூலம் "ஆயுத மோதல்களின் போது பொதுமக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு பாதுகாப்புச் சபைக்கு உள்ளது" எனத் திருத்தப்பட்டது.

இதன் பின்னர் இனப்படுகொலை என்பதற்கான வரைவிலக்கணத்தை 2008 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை "பாலியல் வன்முறை, பாலியல் ரீதியான ஏனைய வன்முறைகள் என்பனவும் யுத்தக் குற்றங்களாகவும், மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்களாகவும் கருதப்படும் என 1820 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் மேலும் விரிவுபடுத்தப்பட்டது.

ஆர்மேனியன் இனப்படுகொலை (Armenian Genocide), கிரேக்க இனப்படுகொலை, பெரும் இன அழிப்பு (2ஆம் உலகப் போரில் யூதர் இனப்படுகொலை) Holodomor இனப்படுகொலை, கம்போடியா இனப்படுகொலை, Communist genocide, ருவாண்டா இனப்படுகொலை, போசுனியன் இனப்படுகொலை, குர்து மக்கள் இனப்படுகொலை, தார்ஃபூர் போர் இனப்படுகொலை போன்ற பல இனப்படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. இந்த வரிசையில் உலகில் 2008ஆம் ஆண்டிற்குப் பின் நடந்த மாபெரும் இனப் படுகொலையாக ஈழத்தில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள்.

இனப்படுகொலை என்பது ஆழ்ந்த வரலாற்று உள்ளடக்கத்தில் பயன்படுத்தப்படும் ஒரு வார்த்தையாகும். இதற்கு நிகரான மட்டத்தில் கொடூரக் குற்றச்சாட்டு எதுவும் இருக்காது. நாஜிக்களால் மேற்கொள்ளப்பட்ட யூதர்களுக்கு எதிரான நடவடிக்கை மட்டுமே கடந்த நூற்றாண்டில் நடந்த இன அழிப்பு என சிலர் கூறுகின்றனர். ஆனால், 1948ஆம் ஆண்டுத் தீர்மானத்தின்படி, குறைந்தது மூன்று இன அழிப்பு சம்பவங்கள் நடந்திருப்பதாக வேறு சிலர் கணக்கிடுகின்றனர்.

முதலாவதாக, 1915க்கும் 1920க்கும் இடையில், ஒட்டோமான் துருக்கியர்களால் ஆர்மீனியர்கள் பெரும் எண்ணிக்கையில் படுகொலை செய்யப்பட்டது. அதன் பிறகு, நாஜிக்களால் 60 லட்சம் யூதர்கள் கொல்லப்பட்டது. மூன்றாவதாக, ருவாண்டாவில் 1994ல் டுட்ஸி, ஹுடு இனத்தைச் சேர்ந்த 8 லட்சம் பேர் கொல்லப்பட்டது. இவைதவிர, 1995ல் போஸ்னியாவின் ஸ்ரெப்ரெனீட்சாவில் நடந்தது இன அழிப்பு என யுகோஸ்லோவியாவுக்கான சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கூறியிருக்கிறது. இதுபோக, 1932-33ல் உக்ரைனில் சோவியத் ஒன்றியம் ஏற்படுத்திய செயற்கைப் பஞ்சம், 1975ல் கிழக்குத் திமோர் மீது இந்தோனேஷியா எடுத்த படையெடுப்பு, 1970களில் கம்போடியாவில் நடந்த க்மெர் ரூஜ் படுகொலைகளையும் சிலர் இனப்படுகொலையாக முன்வைக்கின்றனர்.

ஜெனோசைட் என்று கூறப்படும் இனப்படுகொலை என்பது தமிழர் வரலாற்றில் முக்கியமானதாக ஆகிவிட்டது. 1949ல் டி.எஸ்.சேனநாயக்க அரசாங்கத்தின் நேரடி மேற்பார்வையில் ஆரம்பிக்கப்பட்ட சிங்கள குடியேற்றம் கல் ஓயா, கந்தளாய், அல்லை என்கின்ற தமிழ்ப் பிரதேசங்களைச் சிங்களக் கிராமங்களாக்கியது. 1956 யூன் 5ம் திகதி முதலாவது தமிழினப் படுகொலை கல் ஓயா அபிவிருத்தித் திட்டத்தின் கீழான இங்கினியாகலவில் இடம்பெற்றது. இதில் 156 தமிழர் ஒரேநாளில் படுகொலை செய்யப்பட்டனர்.

1958ம் ஆண்டு தெற்கில் இடம்பெற்ற தமிழினப் படுகொலை சர்வதேசத்தின் வரலாற்றுப் பதிவுக்குச் சென்றது. மே மாதம் 24ம் திகதி முதல் 26ம் திகதி வரை வவுனியாவில் தமிழரசுக் கட்சி நடத்திய மாநாட்டை ஒட்டியதாக இந்தப் படுகொலைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டது. அவசரகாலச் சட்டத்தையோ ஊரடங்குச் சட்டத்தையோ பிறப்பிக்க விரும்பாத அன்றைய பிரதமர் எஸ். டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க. 1977, 1979, 1981ஆம் ஆண்டுகளிலும் தமிழர் படுகொலை ஆங்காங்கு இடம்பெற்றது. 1977ல் முன்னூறுக்கும் மேற்பட்ட தமிழர் 24 மணிநேரத்தில் கொலையுண்டது பதிவில் உள்ளது. இது ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றது. இதே ஆண்டு யூன் முதலாம் திகதிதான் யாழ்ப்பாணப் பொது நூலகம் அமைச்சர்கள் மேற்பார்வையில் எரித்துச் சாம்பலாக்கப்பட்டது. இலங்கையில் தங்களுக்கு உரிமைகள் கிடைக்காமல் பல காலம் அமைதி வழியில் போராடி, அதனால் பல வன்முறைகளை சந்தித்து, இறுதியில் விடுதலைப்புலிகள் ஆயுதம் ஏந்திப் போராடவேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

1983ஆம் ஆண்டு தமிழினப் படுகொலை முன்பு நடந்ததை விட மோசமானது. திட்டமிட்டு தேர்தல் இடாப்பைக் கைகளில் ஏந்தியவாறு, ஏற்கனவே தயாரிக்கப்பட்ட ஆயுதங்களைத் தூக்கிக் கொண்டு வீதிகளையும் வீடுகளையும் அடையாளமிட்டு தமிழர் கொல்லப்பட்டனர். மண்ணையும் மக்களையும் காப்பாற்ற, ஆயுதங்களை ஆயுதங்களால் சந்திக்க வைத்த விடுதலைப் போராட்டம், 2009 மே மாதம் உறைநிலைகாணும் வரை இலங்கையில் இன ஒடுக்குதல் காரணமாகச் சுதந்திரத்திற்கு பிந்தைய வரலாறு முழுவதும் ஈழத் தமிழ் மக்கள் பல்வேறு மனித உரிமை மீறல்களைச் சந்தித்தார்கள். அவற்றுக்கான நீதியை நிலைநாட்ட சர்வதேச நாடுகள் மறுத்தமையின் வெளிப்பாடாக அதன் உச்ச நடவடிக்கையாக 2007ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு மே மாத்தில் முள்ளிவாய்க்காலில் 1,46,679 தமிழர்கள் சிங்கள இனவெறியர்களால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

இலங்கை நீண்ட மனிதப் புதைகுழிகளின் வரலாறு தமிழ் இன அழிப்பின் சாட்சியங்களைக்கொண்ட நாடு. இலங்கையின் மனித புதைகுழிகள் சம்பந்தமான வரலாறு பல ஆண்டுகளைக் கொண்டிருந்தாலும் 1971 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை அதன் பட்டியல் நீண்டு செல்கிறது. 1983ஆம் ஆண்டு முதல் 2009 வரை சுமார் ஒரு லட்சத்து 40 ஆயிரத்திற்கும் (1,40,000) மேற்பட்டோர் காணாமல் போயிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமை ஆணையத்திடம் முறையிடப்பட்டுள்ளது. காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் உடலங்களைக் கொண்ட பாரிய மனித புதைகுழிகள் ஆயிரக்கணக்கில் நாடு முழுவதும் உள்ளன.

2007ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரையில் 40,000க்கும் அதிகமானோர் இலங்கை இராணுவத்தால் காணாமல் ஆக்கப்பட்டனர். வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்கள் பலர் சித்திரவதை செய்யப்பட்டு சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட காணொளிகள், நிழல் படங்களையும் ஊடகங்கள் வாயிலாக காண முடிகின்றது. இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த பலர் இராணுவம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தும் வகையிலான நிழல் படங்களையும் காணமுடிகிறது.

2009 மே 18ஆம் நாள், முல்லைத்தீவு செல்வபுரத்தில், இலங்கை அரச படையினரிடம் சரணடைந்த 800க்கும் அதிகமானவர்கள் பேருந்துகளில் இராணுவத்தினரால் ஏற்றிச் செல்லப்பட்டார்கள். அவர்கள் எங்கே? இராணுவத்தின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டவர்கள், வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்கள் மற்றும் நிராயுதபாணிகளாய் இராணுவத்திடம் சரணடைந்து பேருந்துகளில் ஏற்றும் போதும் அவர்களை கொண்டு செல்லும் போதும் பார்த்த முதலாம், இரண்டாம் சாட்சிகள் வாழும் சாட்சிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது இன்று வரை தெரியவில்லை.

பௌத்த சிங்கள பேரினவாத அரசு மற்றும் அதன் படைகள் திட்டமிட்டும், பரந்தளவிலும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களை நாட்டின் பல பாகங்களிலும் நடந்தேறி உள்ளது. குறிப்பாக வடக்கிலும், கிழக்கிலும் மேற்கொள்ளப்பட்ட மனிதப் புதைகுழிகளின் அகழ்வுப்பணிகள் வெளிகொண்டுவருகின்றன. புதைகுழிகளின் உண்மை நிலை, விரைவில் நாட்டுக்கு அம்பலமாகுவது திண்ணம். படுகொலை செய்யப்பட்டவர்கள் யார்?, அவர்கள் எங்கு படுகொலை செய்யப்பட்டார்கள், எவ்வாறு படுகொலை செய்யப்பட்டார்கள், அவர்களைக் கொலை செய்தவர்கள் யார் என்ற அனைத்து விடயங்களும் தெரிந்தும் ஒன்றும் செய்ய முடியாதவர்களாக இருக்கின்றோம்.

இலங்கையில் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் [JDS], சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டம் [ITJP], மனித உரிமைகள் அபிவிருத்தி மையம் [CHRD] மற்றும் காணாமல் போனவர்களின் குடும்பங்கள் [FoD] போன்ற அமைப்புகளால் அண்மையில் "இலங்கையிலுள்ள பாரிய மனித புதைகுழிகளும், வெற்றியடையாத அகழ்வு பணிகளும்" என்ற அறிக்கை வெளியிடப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினால் இந்த அறிக்கை அண்மையில் பாராளுமன்றத்தில் பேசு களத்தைக் கொண்டதாகக் கையளித்திருந்தார்.

13ஆம் பக்கம் பார்க்க...

**நிலவன்**




# ஆயிரக்கணக்கான பெண்கள் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டும், வெட்டிக் கொல்லப்பட்டும் உள்ளனர்

## சனல் 4 தொலைக்காட்சியிடம் போதிய ஆதாரங்கள்

இலங்கை விவகாரம் தொடர்பாக சனல் 4 தொலைக்காட்சி அக்கறை காட்டுவது ஏன் என்று கடந்த காலங்களில் எமது தினப்புயல் பத்திரிகையில் வெளியிட்டிருந்தோம். அதாவது, வியாபார நோக்கம் அல்லது தமிழ் மக்களுக்கான தீர்வினைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கம் என இருவகையாகப் பிரித்துப் பார்க்கலாம். காரணம் யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியிலிருந்து சனல் 4 ஊடகம் இலங்கை விவகாரம் தொடர்பாக அக்கறை காட்டிக்கொண்டிருக்கிறது.

கையடக்கத் தொலைபேசிகளுடாக இராணுவத்தினரிடமிருந்து பெறப்பட்ட புகைப்படங்களையே சனல் 4 ஊடகமானது இலங்கையரசிற்கெதிரான போர்க்குற்ற ஆவணப்படங்களாக தயாரித்து வெளியிட்டுள்ளது. மேலும் தம்மிடமுள்ள ஆவணப்படங்களினை வெளியிடுவதற்கு தயாராகவுள்ளது. இத்தொலைக்காட்சியானது புலனாய்வு நடவடிக்கைகளை இலங்கை நாட்டில் முடுக்கி விட்டுள்ளது. அது எவ்வாறெனில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவும், ஊடகவியலாளர்களுடாகவும், இலங்கையின் முன்னனி ஊடகங்களில் பணிபுரிபவர்களுடாகவும் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. இராணுவத் தலைமைக் காரியாலயங்களில் பணிபுரியும் உயரதிகாரிகளினுடாகவும், அவர்களின் வெளிநாடுகளில் வாழும் உறவினர்களுடாகவும் இரகசியமான ஆவணப்படங்கள் சனல் 4 தொலைக்காட்சிக்கு ஆதாரங்களாக கிடைக்கப்பெற்றுள்ளன.

ஆதாரங்கள் மூலமாக பிரச்சினைகளுக்குப் தீர்வு காணுவதைவிடுத்து இலங்கை அரசின் ஆதரவாளர்கள் எங்கள் ஊடகப் பணிகளின் மீது தொடர்ச்சியாகப் பகைமையோடு தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள் என்று சனல் 4 ஆவணப் படத்தின் தயாரிப்பாளர் கெலும் மக்ரே தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போரின் இறுதிக் கால கட்டத்தில் இடம்பெற்றதான போர்க்குற்றங்கள் தொடர்பான தமது ஆவணப்படங்கள் குறித்து கெலும் மக்ரே எழுதியுள்ள கட்டுரையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் படத் தொகுப்புகள் மிக வெறுப்பூட்டுபவையாக இருக்கின்றன. பெண் போராளிகளின் உடல்கள் தொடர்பாகப் படையினர் நடந்து கொண்டுள்ள முறைகள், ஒரு முறை சார்ந்த மிருகத்தனமான கலாசாரம் மற்றும் பாலநிலை வன்செயல்களை அவை எடுத்துக்காட்டுகின்றன.

இந்தப் படங்களைக் கைத் தொலைபேசியில் ஒரு சிப்பாய் எடுத்திருக்கிறார். அதில் சிங்களம் பேசும் படையினர் காணப்படுகிறார்கள். அவர்களின் உடைகள் ஒரு விசேட அணியைச் சேர்ந்தவர்களாகக் காட்டுகின்றன. அவர்கள் சிரிக்கிறார்கள். ஊக்கப்படுத்திக் கொள்கிறார்கள். புலிப் போராளிகளின் சாவுகளை கொண்டாடுகிறார்கள். சடலங்களின் மீது அசிங்கமான பாலநிலை வன் செயல்களை மேற்கொள்கிறார்கள்.

போராளிகள் போன்று தோன்றும் இவர்கள் எவ்வாறு கொல்லப்பட்டார்கள் என்பதும் எமக்குத் தெரியாது. இந்தப் படங்களை பிரபல்யமான விஞ்ஞான முறையில் ஆய்வுகள் செய்பவரான வைத்தியர் றிச்சார்ட் யப்பர்ட் பரிசோதனை செய்துள்ளார். சடலங்களில் காணப்படும் காயங்கள் உண்மையானவை. இப் படத் தொகுதி போலியானவையல்ல என்று முடிவுக்கு அவர் வந்தது மட்டுமன்றி அந்தக் காயங்கள் போரின் போது ஏற்பட்டவையாக தெரியவில்லை.

இது போரின் பின்னர் அல்லது ஒளித்திருந்து தாக்கியபோது ஏற்பட்டவை போல் காணப்படுவதாக அவர் ஆச்சரியம் தெரிவித்தார்.

இந்த சடலங்களில் குறைந்தது இரண்டின் மீது காணப்பட்ட காயங்களைதலைகளில்ஏற்பட்டிருந்த ஆழமான காயங்களை அவரால் அடையாளம் காண முடிந்தது. உயர் வேகத் துப்பாக்கி வேட்டுகளால் இவை ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். காயங்களின் ஒழுங்கைப் பார்க்கும்போது இவை கொலை செய்யப்படுவதற்கான வேட்டுகள் என்பதை தம்மால் ஒதுக்க முடியாது என்றும் கூறினார்.

பிரிட்டிஷ் தமிழ் பேரவையினால் எமக்கு வழங்கப்பட்ட வீடியோ படங்களும் பிரிட்டிஷ் நீதிமன்றங்களுக்கு பணியாற்றுகிறவரான கௌரவமான ஒரு டிஜிட்டல் பட ஆய்வாளரால் சுதந்திரமாக பரிசோதிக்கப்பட்டு உண்மையானவை என்று காணப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரதியாக விரிவான ஆய்வின் பின்னர் அவர் கூறினார். 'எதுவித சோடிப்புகளையோ, கையாடல்களையோ என்னால் காண முடியவில்லை. இந்த வீடியோப்படங்கள் உண்மையானவை என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்தியுள்ளன. காட்டப்படும் சம்பவங்களை அவை சரியாக பிரதிபலிப்பவையாக உள்ளன என்று கூறினார்.

இப்படி தொகுப்பில் மிகத் தெளிவாக உள்ளது என்னவென்றால் பாலநிலை கொடுமைகள்தான் பெண்களின் உடல்கள். ஆண்களின் உடல்கள் அல்ல. உடைகள் களையப் பெற்று மீண்டும் மீண்டும் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

புலிகளின் தொலைக்காட்சி அறிவிப்பாளர் இசைப்பிரியா உடைகள் களையப் பெற்று கொல்லப்பட்டதான படங்களை நாம் வெளியிட்டபோது, மோதலின் இடையில் சிக்கி அவர் உயிர் இழந்ததாக அரச தரப்பினர் விடாப்பிடியாக கூறி வந்தார்கள். ஆனால் அவர் படைகளினால் உயிருடன் பிடிபட்டிருக்கும் படம் எமக்கு கிடைத்தது. அவர் ஆயுதம் இல்லாமலிருந்தார் உயிருடன் காயமின்றி காணப்பட்டார்.

இசைப்பிரியா மோதலின் போது இடையில் சிக்கி சாகவில்லை. அரச படைகளின் காவலில் இருந்தபோது அவர் இறந்துள்ளார்.

அந்த அடிப்படையில் தான் இப்பொழுது கிடைத்துள்ள ஆதாரங்கள் ஆராயப்படவேண்டும். ஒரு முறையான திட்டவட்டமான வகையில் வன்முறைகள் பயன்படுத்தப்பட்டு கொலைகள் நடைபெற்றுள்ளன.

இலங்கையில் இருப்பதாகக் கூறப்படுவது போல் ஒழுக்கமும் செயன்முறையும் கொண்ட ஒரு இராணுவத்தில் இந்த மாதிரி செயற்பாடுகளுக்கு கட்டளையிடும் பொறுப்பானது மிக உச்ச நிலை வரைக்கும் தடயங்களை காண முடியும்.

இதன் கருத்து என்னவென்றால் அது பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச வரைக்கும் செல்கிறது மற்றும் ஆயுதப் படைகளின் சகல நிலைக் கட்டளைத் தளபதியான அவரது சகோதரர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை நோக்கியும் போகின்றது.

இலங்கை இராணுவத்தின் யுத்தக் குற்றங்கள் தொடர்பில் வெளியாக்கப்பட்டுள்ள புதிய காணொளி தொடர்பில் தாங்கள் அறிந்திருக்கவில்லை என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து, அதன் பேச்சாளர் இதனை தெரிவித்தார்.

சனல் 4 தொலைக்காட்சி, இலங்கை படையினரின் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களை உறுதிப்படுத்தும் வகையிலான காணொளி ஒன்றை வெளியிட்டிருந்தது. இது தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பில் கேட்கப்பட்ட போது, முதலில் அதற்கு பதிலளிக்க மறுக்கப்பட்டிருந்தது.

எனினும் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது, இந்த காணொளியை தாங்கள் இன்னும் பார்க்கவில்லை என்றும், இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகளின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என்றும் பேச்சாளர் ஸ்டீவன் டுஜாரிக் தெரிவித்திருந்தார்.

சனல் 4 தொலைக்காட்சியிடம் போதிய ஆதாரங்கள் இருக்கின்ற பொழுது இலங்கையரசினை அசைக்க முடியாத நிலை தோன்றுகிறது. இதன் பின்னணியில் அமெரிக்காவின் ஊன்றுசக்தி இருப்பதாக சனல் 4 ஊடகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஈராக், ஈரான், சிரியா போன்ற நாடுகளில் ஒரு சில போர்க்குற்றங்களை வைத்தே அமெரிக்க அரசு அந்நாட்டிற்கு படையெடுத்து பாரிய அழிவினை ஏற்படுத்தியுள்ளது.

ஆயிரக்கணக்கான பெண்கள் கற்பழிக்கப்பட்டும், துண்டங்களாக வெட்டிக் கொல்லப்பட்டும் உள்ளனர். ஆண் - பெண் இருபாலாரும் மரம் வெட்டும் வாலால் கூட வெட்டிக்கொலை செய்யப்பட்ட காட்சி களும் இருக்கின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் அமெரிக்க அரசு திடீரென்று இறங்கி தனது செயற்பாடுகளை செயற்படுத்த தயக்கம் காட்டி வருகின்றது.

ஆனால் உண்மையில் யார் இந்த செயல்களைச் செய்தார்களோ அவர்களுக்கான தண்டனை வழங்கப்படவேண்டும். சனல் 4 வின் ஆவணப்படங்களுக்கு இலங்கை அரசாங்கம் பதில் கூறியே ஆகவேண்டும். இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் சனல் 4 தொலைக்காட்சியால் ஆவணப் படுத்தப்பட்டுள்ளன. யுத்தம் நிறைவடைந்து 12 வருடங்களைக் கடந்துவிட்டபோதிலும், சர்வதேச நாடுகளை உள்ளடக்கிய ஐ.நா மன்றம் கூறும் தீர்ப்பு என்னவாக இருக்கப்போகின்றது என்பது இலங்கை அரசிற்கு பெரும் தலையிடியினைக் கொடுத்துள்ளது என்பதுதான் உண்மையான விடயம்.

**மறவன்**

# விடுதலைப்புலிகளை அழித்த பின்னர் தீர்வு என்ற கதை இப்போது பாலஸ்தீனர்களுக்கு! - நடப்பது என்ன?



மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குச் சாதகமான முறையிலும் ரஷ்ய - சீனக் கூட்டுக்கு ஏற்ற முறையிலும் இரட்டை நிலைப்பாட்டுடன் இந்தியா இயங்குகின்றது. ஈழத்தமிழர் விவகாரத்திலும் இந்தியா இரட்டை நிலைப்பாட்டை முன்னெடுக்கிறது. ஆகவே விடுதலை இயக்கங்களைத் தலையெடுக்கவிடக் கூடாது என்ற வன்மம் ஏன் இந்திய மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்படுகின்றது? ஹமாஸ் இயக்கத்தை ஐ.நா கண்டித்தளவுக்கு இஸ்ரேலை ஏன் கண்டிக்கவில்லை?

விடுதலைப் புலிகள் பயங்கர வாதிகள் அவர்களை அழித்த பின்னர்தான் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று ஜே.ஆர்.ஜயவர்த்தனாவில் இருந்து தற்போதைய அதிபர் ரணில் விக்ரமசிங்க வரையும் அன்று மார்தட்டியிருந்தனர். புலிகள் வேறு தமிழ் மக்கள் வேறு எனவும் நியாயம் கற்பித்திருந்தனர். இதனை உள்வாங்கியே புலிகளை அழிக்க 2002 பெப்ரவரியில் சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் திட்டம் வகுக்கப்பட்டிருந்தமை இஸ்ரேல் - பலஸ்தீன போர் ஆரம்பமானதில் இருந்து வெளிச்சத்துக்கு வருகிறது.

2020 ஜனவரியில் நாடாளு மன்றத்தில் இடம்பெற்ற விவாதம் ஒன்றில் உரையாற்றிய இரா.சம்பந்தன். விடுதலைப் புலிகளை அழித்துப் போரை முடிவுக்கொண்டு வந்த பின்னர் நிரந்த அரசியல் தீர்வு வழங்கப்படும் என்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அமெரிக்க இந்தியத் தூதுவர்கள் 2009 ஜனவரி மாதம் தன்னைச் சந்தித்து கேட்டிருந்ததாக விபரித்தார். அரசியல் தீர்வு ஏற்படும் என்ற உறுதிமொழியை நம்பியதாகவும் ஆனால் பத்து ஆண்டுகள் சென்ற பின்னரும்கூட தீர்வு ஏற்படவில்லை எனவும் அமெரிக்க இந்திய அரசுகள் தன்னை ஏமாற்றியுள்ளதாகவும் சம்பந்தன் கவலை வெளியிட்டிருந்தார்.

### இஸ்ரேல் – பாலஸ்தீனம்

இப்போது இஸ்ரேல் - பாலஸ் தீனம் போர் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கனடா பிரதமர் யஸ்ரின் ட்ரூடோ என்ன சொல்கிறார்? ஹமாஸ் இயக்கம் வேறு பலஸ்தீன மக்கள் வேறு என்கிறார். ஹமாஸ் அழிக்கப்பட்ட பின்னரே பாலஸ்தீனியர்களுக்கு தீர்வு என்றும் நாடாளுமன்றத்தில் ட்ருடோ கூறியிருக்கிறார். இதனையே அமெரிக்க அதிபர் ஜோ பைடனும் சொல்கிறார். ஆனால் காசா மருத்துவமனை மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்குக் கண்டனம் வெளியிடப்படவில்லை. இருந்தாலும் பாதிக்கப்பட்ட பாலஸ்தீன மக்களுக்காக நூறு மில்லியன் டொலர்களை வழங்கவுள்ளதாக ஜோ பைடன் அறிவித்திருக்கிறார்.

### அரசியல் நியாயம்

ஐரோப்பிய நாடுகளும் நிதியுதவிகளை வழங்கவுள்ளதாக அறிவித்திருக்கின்றது. ஆனால் இஸ்ரேல் காசா மீது நடத்தும் தாக்குதலை பகிரங்கமாகக் கண்டிக்க வேயில்லை. முதன் முதலில் கடந்த ஏழாம் திகதி ஹமாஸ் இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலைக் கண்டித்த மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள், இஸ்ரேல் பாலஸ்தீனம் மீது கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக மேற்கொண்ட அத்துமீறல்களைக் கண்டுகொள்ளவில்லை, கண்டிக்க வுமில்லை. இந்த அத்துமீறல்களை எதிர்ப்பதற்கான அதி உச்ச ஏற்பாடாகவே ஹமாஸ் இஸ்ரேல் பொதுமக்கள் மீதும் தாக்குதல் நடத்தியிருந்தது. ஆகவே நியாயம் மூடி மறைக்கப்படுகின்றது? அரசியல் நியாயம் என்பது இஸ்ரேல் அரசுக்குச் சாதகமாகவும் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் புவிசார் அரசியல் - பொருளாதார நோக்கிலும் அமைந்துள்ளதை இந்த போர் பட்டவர்த்தனமாகக் காண்பிக்கிறது.

வன்னி பெருநிலப்பகுதியில் 2009இல் இலங்கை அரசாங்கம் நடத்திய போர் சாட்சியங்கள் இன்றி நடத்தப்பட்டதாகச் சம்பந்தன் 2010 இல் நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார். கிளிநொச்சியில் இருந்து ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகங்கள் அனைத்தும் முற்றாக மூடப்பட்டு அங்கு பணிபுரிந்த அனைத்து வெளிநாட்டவர்களும் கொழும்புக்கு அழைக்கப்பட்டிருந்ததாகவும் சம்பந்தன் எடுத்துக் கூறியிருந்தார். கிளிநொச்சியில் அலுவலகங்கள் மூடப்பட்டபோது அங்கு ஒன்றுகூடிய மக்கள் தங்களைத் தனியாகக் கைவிட்டு வெளியேறவேண்டாம் என்று கோசம் எழுப்பி அழுது புலம்பினர் என்றும் சம்பந்தன் சுட்டிக்காட்டியிருந்தார். ஆகவே சாட்சியங்கள் இன்றி வன்னி பெருநிலப்பரப்பில் நடந்த அத்தனை கொலைகளுக்கும் இலங்கை அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று சம்பந்தன் நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகக் கோரியிருந்தார். ஆனால் சிங்கள ஆட்சியாளர்கள் இதுவரை பொறுப்புக் கூறவில்லை. அத்துடன் அமெரிக்க இந்திய அரசுகள் தங்கள் மனச்சாட்சியை இதுவரை தொட்டுப் பார்க்கவுமில்லை

### சர்வதேச நீதி என்ன?

இந்த நிலையில் பலஸ்தீனம் மீது இஸ்ரேல் மேற்கொள்ளும் தாக்குதல்களைக் கண்டுகொள்ளாமல் ஹமாஸ் இயக்கத்தை அழிப்பதிலேயே மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் குறியாக இருக்கின்றன. பலஸ்தீனம் தனிநாடு என்ற நிலைப்பாட்டை ஏற்று 139 நாடுகள் 2012 இல் ஐ.நா சபையில் வாக்களித்திருக்கின்றன. இந்தியா ஆதரித்தாலும் இஸ்ரேல் மேற்கொள்ளும் இன அழிப்புகள் பற்றி வாய்திறக்கவில்லை. ஹமாஸ் தாக்குதல்களில் இஸ்ரேலில் சாதாரண அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதை மறுக்க முடியாது. ஆனால் அதனையும் விட மிக கொடூரமாக பலஸ்தீன மக்கள் கடந்த எழுபது வருடங்களாக இன அழிப்புக்குள்ளாகி வருகின்றனர். அவர்களின் பாரம்பரிய பிரதேசங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன. பலஸ்தீன பொருளாதார வளங்கள் இஸ்ரேல் அரசினால் அபகரிக்கப்பட்டும் அழிக்கப்பட்டுமுள்ளன. ஆனால் சர்வதேச நீதி என்ன?

### ஐ.நா சபையின் பின்னால் செயற்படுவது யார்?

ஒருகட்டத்தில்பலஸ்தீனமக்களுக்காக மத்திய கிழக்கு நாடுகள் அமெரிக்காவுடன் இணைங்கிப் போகவும் தயாராக இருந்தன. எண்ணெய் வளங்களைப் பரிமாறவும் அதற்குரிய ஒப்பந்தங்களில் கைச்சாத்திடவும் இணைங்கியிருந்தன. ஆனால் பலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் தொடர்ச்சியான இன அழிப்பினால் மத்திய கிழக்கு நாடுகள் அமெரிக்காவுடனான உறவைத் தொடருவதற்குத் தயக்கம் காண்பித்திருந்தன. 2012 இல் ஐக்கிய நாடுகள் சபையில் பலஸ்தீனம் தனிநாடாக இருக்கவேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டபோது அமெரிக்கா ஆதரவு வழங்கவில்லை. ஆனாலும் அமெரிக்காவுடன் மத்திய கிழக்கு நாடுகள் உறவைப் பேணி வந்தன. 2016இல் அமெரிக்காவில் பதவிக்கு வந்த டொனால்ட் ட்ரம்ப் மேற்கொண்ட பலஸ்தீன எதிர்ப்பு நடவடிக்கைகள் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தன. ஆனால் 2020 ஜனவரியில் பதவிக்கு வந்த ஜோ பைடன் நிர்வாகம் அதனைச் சீர்ப்படுத்தியிருக்க வேண்டும்.மாறாக மத்திய கிழக்கு நாடுகளுடன் மென்போக்கு நகர்வைக் கையாண்டு டொனால்ட் ட்ரம்ப் மேற்கொண்ட அனைத்துச் செயற்பாடுகளையும் அப்படியே முன்னெடுத்து இஸ்ரேலுக்கு ஜோ பைடன் வலுச்சேர்த்திருக்கிறார். இப் பின்புலத்திலேயே பாலஸ்தீனம் மீது ஆரம்பிக்கப்பட்டுள்ள போர், மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட ஐக்கிய நாடுகள் சபை அதன் கீழ் இயங்கும் அனைத்துச் சர்வதேச பொது அமைப்புகள் மீதும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன.

ஏனெனில் ஈழத்தமிழர் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபை தவறிழைத்திருக்கிறது என ஐ.நா நிபுணர்குழு 2010இல் வெளியிட்ட அறிக்கையில் பகிரங்கமாகச் சுட்டிக் காட்டியிருந்தது. பொதுமக்கள் கொல்லப்படுவதை சர்வதேசம் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. ஜெனீவா மனித உரிமைச் சபை அறிக்கைகளிலும் பொதுமக்கள் கொல்லப்பட்டபோது தடுத்து நிறுத்த சர்வதேசம் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது என்று சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை குற்றம் சுமத்தியிருந்தார்.

ஆனால் தற்போது ஹமாஸின் தாக்குதலையடுத்து பலஸ்தீனம் மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும் பத்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்தும் அவலப்படுகின்றனர். அதனைத்தடுக்க ஐ.நா நடவடிக்கை எடுக்கவில்லை. வன்னி பெருநிலப்பரப்பில் இலட்சக் கணக்கில் உயிரிழப்புகள் ஏற்பட்ட போது அதனைத் தடுக்கத் தவறிய ஐ.நா ஏன் பலஸ்தீனத்தில் தடுக்க முற்படவில்லை?

### முள்ளிவாய்க்கால் இறுதிக்கட்ட போர்

முள்ளிவாய்க்கால் இறுதிக்கட்ட போர் தொடர்பாக ஐ.நா 2010 இல் வெளியிட்ட நிபுணர்குழு அறிக்கையை ஒரு பாடமாக எடுத்துப் பலஸ்தீனத்தில் உயிரிழப்புகள் ஏற்படுவதைத் தடுக்கலாமல்லவா? ஐ.நாவில் அங்கீகாரம் உள்ள பலஸ்தீன மக்கள் இஸ்ரேலினால் கொல்லப்படுவதை ஐ.நா ஏன் பார்த்துக் கொண்டிருக்கிறது? ஆகவே ஐ.நா சபையின் பின்னால் செயற்படுவது யார்? இக் கேள்விகளுக்கு பதில் சொல்லவேண்டிய பொறுப்பு யாருடையது? வல்லரசு நாடுகளின் புவிசார் அரசியல் - பொருளாதார நலன் என்பது இதுதான். அதாவது மனித உரிமை, ஜனநாயகம் என்று தமது தேவைக்கு ஏற்ப அளந்து பேசுவது. அத்துடன் புவிசார் அரசியல் - பொருளாதார நலன்களைப் பெறும் நோக்கில் மனித உரிமை மீறல், இன அழிப்பு என்று காண்பித்து குறித்த அரசுகளுக்கு எச்சரிக்கை விடுப்பதும் இந்த வல்லாதிக்க நாடுகளின் வழமை. இதற்கு வசதியாக ஐ.நா சபையும் ஜெனீவா மனித உரிமைச் சபையும் பக்கபலமாக இயங்குகின்றன. விடுதலை இயக்கங்கள் மீதான தவறுகள் கண்டுபிடிக்கப்படுதல் அல்லது திட்டமிட்டு தவறுகளை உருவாக்குதல் என்பதன் பின்னணியையும் இங்கிருந்து தான் நோக்கவேண்டும்.

2009 இல் விடுதலைப் புலிகளுக்கு நடந்ததையும் தற்போது ஹமாஸ் இயக்கத்துக்கு நடந்து கொண்டிருப்பதையும் இப் பின்புலத்தில் இருந்துதான் ஆராயவேண்டும். உலகில் பயங்கரவாதம் என ஒன்று இல்லை. அதனை உருவாக்குவது அல்லது அதற்குக் காரணமாக இருப்பது இந்த வல்லாதிக்க நாடுகள்தான். ஆனால் விடுதலை இயக்கங்களைப் பயங்கரவாதிகளாகச் சித்தரித்து, அந்த விடுதலை இயக்கங்கள் எந்த அரசுக்கு எதிராகப் போரிடுகின்றதோ அந்த அரசைக் காப்பாற்றும் நகர்வுகளிலேயே அமெரிக்கா போன்ற வல்லாதிக்க நாடுகள் முனைப்புக் காட்டும்.



குறிப்பாக இஸ்ரேல் அரசை வேறு பார்வையிலும் சிறிய நாடான இலங்கையை இந்தோ - பசுபிக் விவகாரத்திலும் அமெரிக்கா கையாள் வதை அவதானிக்க முடியும். இதற்கு இந்தியாவும் பின்னணியாகச் செயற்படுகிறது. ஏனெனில் இந்திய மாநில அரசுகளுக்கு, உரிய அதிகாரங்கள் இல்லை. இந்திய மத்திய அரசிடமே அனைத்து அதிகாரங்களும் உண்டு. இதனை மையமாகக் கொண்டு தமது இந்தியப் பிராந்தியப் பாதுகாப்புக் கருதி ஈழத்தமிழர்களுக்கும் அரைகுறைத் தீர்வான பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை இந்தியா இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து 1987 இல் உருவாக்கியிருந்தது. அதற்கு எதிராக இந்திய இராணுவத்துடன் இடம்பெற்ற போரில் ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர்.

தொடரும்...

**நெற்றிப்பொறியன்**

# நோகாமல் போராடும் கட்சிகளின் கடையடைப்பு?

காந்தி சொல்வார்... அகிம்சை என்பது சாகத் துணிந்தவரின் ஆயுதம். அது சாகப் பயந்தவரின் ஆயுதம் அல்லவென்று. அகிம்சையில் மட்டுமல்ல வன்முறை போராட்டத்திலும் அதுதான் அடிப்படை விதி. அர்ப்பணிப்புக்குத் தயாராக இருப்பவர்கள்தான் தலைமை தாங்கலாம். தியாகத்துக்கு தயாராக இருக்கும் தலைமையின் கீழ் மக்கள் துணிந்து அணி திரள்வார்கள். முன்னுதாரணம் மிக்க தலைவர்களின் பின்தான் மக்கள் அணி திரண்டிருக்கிறார்கள்.



ஆனால் தமிழரசியல் அரங்கில் முல்லைத்தீவு நீதிபதிக்கு ஆதரவாக நடந்து கொண்டிருக்கும் போராட்டங்களைத் தொகுத்துப் பார்த்தால், ரிஸ்க் எடுப்பதற்கு தயாரில்லாத தலைவர்கள் பொது மக்களை ரிஸ்க் எடுக்குமாறு தூண்டுகிறார்களா? என்று கேட்கத் தோன்றுகிறது.

ஏழு கட்சிகள் இணைந்து கடந்த வாரம் மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தின. அது பெரிய வெற்றியைப் பெறவில்லை. அண்மையில் ஒரு கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. முல்லைத்தீவு நீதிபதி, நிலப் பறிப்பு, சிங்கள பௌத்த மயமாக்கல், மேய்ச்சல் தரை போன்ற எல்லா விவகாரங்களுக்குமாக வடக்குக் கிழக்கு முழுவதுக்குமாக கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

முஸ்லிம் கொங்கிரசும் அதற்கு ஆதரவு தருவதாக வாக்குறுதி அளித்ததாக ஒரு தகவல் வெளியாகியிருந்தது. ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை காரணமாக திகதியை ஒத்திவைக்குமாறு கேட்கப்பட, அதனால் இருபதாம் திகதி, வெள்ளிக் கிழமை பூரண கடையடைப்பு என்று அறிவிக்கப்பட்டது. ஏன் வெள்ளிக்கிழமை தேர்ந் தெடுக்கப்பட்டது என்பதற்கு பின்வரும் காரணங்கள் கூறப்பட்டன.

முதலாவது காரணம், குறுகிய காலத்துக்குள் ஒழுங்கு செய்யக்கூடிய ஒரு போராட்டம் அதுதான் என்பது. இரண்டாவது காரணம், பெரிய போராட்டங்களுக்குத் தேவையான நிதியை உடனடியாகத் திரட்டுவதில் உள்ள சவால்கள். மூன்றாவது காரணம், வடக்குக் கிழக்கு தழுவிய ஒரு போராட்டம் குறிப்பாக முஸ்லிம்களையும் உள்ளடக்குவது என்று பார்த்தால் கடையடைப்பே வசதியானது. நாலாவது காரணம், அது வார இறுதி என்பதால் அன்றைக்கு வியாபாரம் பெரியளவு நடக்காது. எனவே வணிகர்கள் கடைகளை மூடச் சம்மதிப்பார்கள். ஐந்தாவது காரணம், அன்றைக்கு ஒன்பதாம் ஆண்டுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு தனியார் வகுப்புகள் நடக்காது. எனவே அந்தக் கடையடைப்பால் பிள்ளைகளின் படிப்பு அதிகம் பாதிக்கப்படாது. ஆறாவது காரணம், வெள்ளிக்கிழமை என்பதனால் முஸ்லிம்களும் அந்நாளில் கடைகளை மூடத் தயார் என்பது. இக்காரணங்களினால் அந்த வெள்ளிக்கிழமை தேர்ந்தெடுக்கப்பட்டதாக தெரிவிக் கப்பட்டது.

ஆனால் அதைவிட முக்கியமாக மூன்று காரணங்கள் உண்டு. முதலாவது காரணம், தமிழ் அரசியல்வாதிகளிடம் 2009க்குப் பின்னரான அறவழிப் போராட்டம் தொடர்பாக பொருத்தமான தரிசனங்கள் இல்லை என்பது. அவர்கள் போராடுவோம் போராடுவோம் என்று கூறுகிறார்கள், ஆனால் எப்படிப் போராடுவது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. புதிய போராட்ட வடிவங்களைக் கண்டுபிடிக்க அவர்களால் முடிய வில்லை. அதனால்தான் பழைய, வழக்கொழிந்த அல்லது சிறு திரள், கவன ஈர்ப்புப் போராட்டங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். பெருந்திரள் மக்கள் போராட்டங்களை ஒழுங்குபடுத்த அவர்களால் முடியவில்லை.

இரண்டாவது காரணம், அவர்களிடம் மக்களைத் திரட்டத் தேவையான அடிமட்டக் கட்டமைப்புக்கள் இல்லை.ஏற்கனவே பலமாகஉள்ளகட்டமைப்புக்களில்தான் தங்கியிருக்கிறார்கள். ஏற்கனவே உள்ள சிவில் கட்டமைப்புக்கள் சம்மதித்தால், ஒருநாள் வாழ்க்கையை ஒப்பீட்டளவில் முடக்கலாம். உதாரணமாக வணிகர் கழகங்கள், தனியார் வாகன உரிமையாளர்கள், சந்தை நிர்வாகங்கள் போன்றன ஒத்துழைத்தால் கடைகளை, சந்தைகளை மூடலாம், பொதுப் போக்குவரத்தை முடக்கலாம்.

மூன்றாவது காரணம், அவர்கள் ரிஸ்க் எடுக்கத் தயாரில்லை. இதை இன்னும் ஆழமான பொருளில் சொன்னால், அவர்கள் தங்களுடைய மக்களுக்குத் தங்களுடைய அரசியல் இலக்குகளுக்கு விசுவாசமாக இல்லை. அதற்காக அர்ப்பணிப்போடு போராடத் தயாரில்லை. சிவப்பு மஞ்சள் கொடிகளைக் கட்டி, தாயகம் தேசியம் சுயநிர்ணயம் என்று கோஷம் வைத்தால் தமிழ் மக்கள் தங்களின் பின் வருவார்கள் என்று கற்பனை செய்கிறார்கள் அல்லது ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட பெயர்களை முன்னிறுத்தி அல்லது ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட சின்னங்களை முன்னிறுத்தி வாக்குகளைத் திரட்ட ஆசைப்படுகிறார்கள். ஆனால் ஒரு புதிய சின்னத்தை ஒரு புதிய கொடியை அறிமுகப்படுத்தி அதற்காக அர்ப்பணித்து தம்மை உருக்கிப் போராடி அந்தச் சின்னத்தை, அந்தப் புதிய பெயரை மக்களுடைய மனங்களில் ஆழமாகப் பதிய வைக்க அவர்களால் முடியவில்லை. இந்த இயலாமைகள்தான் அரசியல்வாதிகள் தங்களுக்கு நோகாத போராட்டங்களை தேர்ந்தெடுக்க காரணம்.



தாங்கள் ரிஸ்க் எடுத்து தாங்கள் முன்நின்று போராடத் தயாரில்லாத அரசியல் தலைவர்கள் மக்களுக்கும் நோகாமல் தங்களுக்கும் நோகாமல் எப்படிப் போராடுவது என்று சிந்தித்து கண்டுபிடித்த ஒரு போராட்டந்தான் கடையடைப்பா? கடந்தவாரம் அவர்கள் ஒழுங்குபடுத்திய மனிதச் சங்கிலிப் போராட்டம் ஏன் வெற்றி பெறவில்லை என்பதிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ளாத கட்சிகள் மீண்டும் ஒரு தடவை தங்களுக்கு நோகாத ஒரு போராட்டத்துக்கு அழைப்பா?, ஏற்கனவே, இந்த ஆண்டு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிக்கு நீதி கேட்டு ஒரு கடையடைப்பு நடத்தப்பட்டது. அண்மையில் மேலுமொரு கடையடைப்பு.

எந்த ஒரு போராட்டமும், அது ஆயுதப் போராட்டமாக இருந்தாலும் சரி, அகிம்சைப் போராட்டமாக இருந்தாலும் சரி, அது பிரதானமாக இரண்டு விளைவுகளை ஏற்படுத்த வேண்டும்.

முதலாவது விளைவு, அகவயமானது. அது மக்களை போராட்டத்தை நோக்கித் திரட்ட வேண்டும். குறிப்பிட்ட அமைப்பின் கீழ் அல்லது கட்சியின் கீழ் மக்கள் ஒரு திரண்ட சக்தியாக, ஆக்க சக்தியாக மாற்றப்பட வேண்டும். அந்த மக்கள் திரட்சிதான் எதிரியைப் பணிய வைக்கும் வெளி உலகத்தைப் போராட்டத்தை நோக்கி ஈர்க்கும். எனவே எந்த ஒரு போராட்டமும் மக்களை ஒரு மையத்தில் திரட்டி மகத்தான ஆக்க சக்தியாக மாற்றக் கூடியதாக இருக்க வேண்டும்.

இரண்டாவது விளைவு புறவயமானது. அப்போராட்டமானது எதிர்த்தரப்புக்கு வலியை ஏற்படுத்த வேண்டும். சேதத்தைத் தாக்கத்தை இழப்பை ஏற்படுத்த வேண்டும். எதிர்த் தரப்பின் பொருளாதாரத்தை அல்லது நிர்வாகத்தை முடக்க வேண்டும். எந்த ஒரு போராட்டமும் எதிர்த் தரப்புக்கு தாக்கமான சேதத்தை ஏற்படுத்தவில்லையென்றால் அங்கே அரசியல் வலுச்சமநிலை மாறாது. அரசியல் வலுச்சமநிலையை மாற்றக்கூடிய சக்தி போராட்டத்திற்கு இருக்கவேண்டும்.

இந்த விளக்கத்தின் அடிப்படையில் கடையடைப்பு என்ற போராட்ட வடிவத்தைப் பார்ப்போம்.

இக்கட்டுரை கடையடைப்பை நிராகரிக்கவில்லை. கடையடைப்பில் ஒரு அடிப்படை நன்மை உண்டு. என்னவெனில், மக்கள் தாமாக முன்வந்து கடைகளை மூடும் பொழுது அங்கே ஒரு கூட்டுணர்வு ஏற்படும். ஒரு நாள் உழைப்பை இழப்பதற்கு தயாராகும் மக்கள் தங்களால் இயன்ற தியாகத்தை அன்றைக்குச் செய்கிறார்கள். அதனால் வரும் இழப்பை ஏற்றுக் கொள்ளச் சித்தமாய் இருக்கிறார்கள். எனவே போராட்ட நெருப்பை ஒரு சிறு அளவுக்கேனும் அணையாமல் வைத்திருக்க அந்த நாள் உதவும். மக்களை குறைந்தபட்சம் ஒரு தேசமாகத் திரட்ட அது உதவும். அதாவது கடையடைப்பால், அகவயமான நன்மையுண்டு.

இந்த ஒரு நன்மைதான் கடையடைப்பில் உண்டு. மற்றும்படி ஒருநாள் கடையடைப்பு தமிழ் வணிகர்களுக்கும் அன்றாடம் உழைப்பவர்களுக்கும் ஏற்படுத்தக் கூடிய இழப்பை விடவும் அதிகரித்த இழப்பை அரசாங்கத்திற்கு ஏற்படுத்துமா? அல்லது அது உலகத்தை திரும்பிப் பார்க்க வைக்குமா?

கடந்த ஆண்டு டெல்லியில் விவசாயிகள் தொடர்ச்சியாகப் போராடினார்கள். ஆசிரியர்கள் அதிபர்கள் தொடர்ச்சியாகப் போராடினார்கள். கோட்டா கோகம போலவே விவசாயிகளின் போராட்டமும் உலகின் கவனத்தை ஈர்த்தது. முடிவில் இந்திய அரசாங்கம் விவசாயிகளின் கோரிக்கைகளுக்குப் பணிந்தது.

ஆனால் ஏழு கட்சிகளின் ஒரு நாள் கடையடைப்பு அரசாங்கத்தைப் பணிய வைத்துள்ளதா? அல்லது தமிழ் மக்கள் எதிர்க்கிறார்கள் என்ற ஒரு விடயத்தை உலகத்துக்கும் அரசாங்கத்துக்கும் உணர்த்துவது மட்டும்தான் கடையடைப்பின் நோக்கமா? அல்லது தமிழ்க் கட்சித் தலைவர்கள் நோகாமல் போராடுவதற்கு வசதியான ஒரு போராட்ட முறைதான் கடையடைப்பா?

**நிலாந்தன்**



# பிராந்திய செய்திகள்



## பலஸ்தீன் மக்களுக்கு ஆதரவாக கல்முனை வாழ் மக்களின் போராட்டம்




பலஸ்தீன் மக்களுக்கு ஆதரவாக கல்முனை வாழ் மக்களின் போராட்டம்மற்றும் துஆ பிராத்தனை (27) கல்முனை முகையதீன் ஜும்மா பள்ளிவாசலின் அருகில் இடம் பெற்றது.

பலஸ்தீன் மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான யுத்தம் இன்றுடன் பல நாட்களாக இடம் பெற்று வருகின்ற நிலையில் யுத்தத்தினால் இதுவரையில் பல ஆயிரக்கணக்கான குழந்தைகள், மக்கள் உயிரிழந்துள்ளனர் .

பலஸ்தீன் மக்களுக்கு ஆதரவாக கல்முனையில் ஒன்று கூடிய பொது மக்கள் கல்முனை முகையதீன் ஜும்மா பள்ளிவாசல் அருகில் பல்வேறு சுலோகங்களை ஏந்தி துஆ பிராத்தனையில் ஈடுபட்டு அமைதியான முறையில் கலைந்து சென்றனர். அத்துடன் கல்முனை முகையதீன் ஜும்மா பள்ளிவாசலில் இலங்கை மற்றும் பலஸ்தீன் கொடிகளை பொதுமக்கள் பறக்கவிட்டுள்ளனர். (பாறுக் ஷிஹான்)

## மத்திய கிழக்கில் வாழும் இலங்கையர்களுக்கான முக்கிய அறிவிப்பு



மத்திய கிழக்கில் நிலவும் மோதல் நிலை காரணமாக அங்கு வாழும் இலங்கையர்களின் அவசர உதவிகளுக்காக தொலைபேசி வசதியொன்றை வெளிவிவகார அமைச்சின் தூதரக விவகாரப் பிரிவு அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன்படி,0094711757536 அல்லது 0094711 466 585 என்ற இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கு மேலதிகமாக, வெளிவிவகார அமைச்சின் கொன்சியூலர் அலுவல்கள் பிரிவின் +94 112 338 837 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அலுவலக நேரத்தில் அழைப்புகளை மேற்கொள்ள முடியும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் உள்ள இலங்கையர்கள், repatriation.consular@mfa.gov.lk என்ற மின்னஞ்சல் மூலம் தூதரக விவகாரப் பிரிவுக்கு தகவல்களை வழங்க முடியும். இதேவேளை, மத்திய கிழக்கில் உள்ள இலங்கையர்கள் அபாயகரமான பகுதிகளுக்கு பயணிக்க வேண்டாம் என குறித்த அறிக்கையின் மூலம் வெளிவிவகார அமைச்சு மேலும் கோரியுள்ளது. மத்திய கிழக்கில் உள்ள இலங்கையர்கள் இஸ்ரேலின் டெல் அவிவ் மற்றும் பாலஸ்தீனத்தின் ரமல்லாவில் உள்ள இலங்கை தூதரகங்களின் உறுப்பினர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்குமாறும் வெளிவிவகார அமைச்சு கேட்டுக்கொள்கிறது.

## அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு




கொழும்பு துறைமுக நகரத்தில் சுங்க வரியில்லா சில்லறை வர்த்தகம் அல்லது சுங்க வரியில்லா வணிக வளாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தேவைகள் (requirement) வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் குறித்த தேவைகள் (requirement) வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஒரு முதலீட்டாளர் ஒரு சுங்க வரியில்லா சில்லறை வர்த்தகத்தை நடத்த குறைந்தபட்சம் 05 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்ய வேண்டும்.

குறித்த முதலீட்டாளருக்கு சுங்க வரியில்லா வர்த்தக நடவடிக்கைகளில் உலகளாவிய அனுபவமும் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சுங்க வரியில்லா வணிக வளாக வர்த்தகத்தை நடத்துவதற்கு, ஒரு முதலீட்டாளர் குறைந்தபட்சம் 07 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்ய வேண்டும் என்றும் குறித்த வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## A/L பரீட்சையை ஒத்திவைக்குமாறு உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல்

G.C.E (A/L)

எதிர்வரும் ஜனவரி மாதம் 4ஆம் திகதி நடைபெறவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சையை மேலும் ஒத்திவைத்து உத்தரவிடுமாறு கோரி மாணவர்கள் குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பில் ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க கல்வி அமைச்சர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு உயர் நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

இது தொடர்பான மனு (27) முர்து பெர்னாண்டோ, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் அழைக்கப்பட்டது. பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், நீதிமன்றில் கோரிக்கை ஒன்றை விடுத்து, இந்த வழக்கு தொடர்பான ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க கால அவகாசம் கோரினார்.

இதன்படி, எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் குறித்த ஆட்சேபனைகளை தாக்கல் செய்யுமாறு பிரதிவாதிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதனையடுத்து, மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி லக்ஷான் டயஸ் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், மனுவை பரிசீலிக்க நவம்பர் 23ஆம் திகதிக்கு அழைப்பு விடுக்க உத்தரவிட்டது. கனிஷ்க சந்தருவன் உள்ளிட்ட மூன்று உயர்தர பரீட்சை பரீட்சார்த்திகளால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

உயர்தரப் பரீட்சையின் அளவுகோல்களின் படி, தங்களுக்கு 495 நாட்கள் படிப்புக் காலம் உள்ளது என்று மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், நாட்டில் நிலவிய மின்வெட்டு உள்ளிட்ட பல்வேறு மோசமான காரணங்களால், இந்த ஆண்டு 300 நாட்களாக படிப்பு காலம் வரையறுக்கப்பட்டுள்ளதாக மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதன் காரணமாக அனைத்து பாடத்திட்டங்களையும் முடிக்க முடியவில்லை என சுட்டிக்காட்டியுள்ள மனுதாரர்கள், அந்த நிபந்தனையின் கீழ் உயர்தரப் பரீட்சை நடத்தினால், தங்களுக்கு பாரிய அநீதி ஏற்பட வாய்ப்புள்ளதாக குறிப்பிட்டுள்ளனர். இதன்படி, குறித்த பரீட்சையை மேலும் ஒத்திவைப்பதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு மனுதாரர்கள் உயர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த மனுவில் பிரதிவாதிகளாக கல்வி அமைச்சர், கல்வி அமைச்சின் செயலாளர், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## சந்திர கிரகணத்தை காண இலங்கையர்களுக்கு சந்தர்ப்பம்

4 மணி நேர பகுதி சந்திர கிரகணத்தை பார்வையிடும் சந்தர்ப்பம் இலங்கையருக்கு கிடைத்துள்ளது. இச்சந்திர கிரணகம் ஒக்டோபர் 28 இரவு தொடக்கம் 29 ஆம் திகதி காலை வரை சுமார் 4 மணித்தியாலங்கள் 25 நிமிடங்கள் தென்படவுள்ளதாக மொரட்டுவை ஆர்தர் சி கிளார்க் மையம் இதுபற்றி தெரிவித்துள்ளது.

இதன்பிரகாரம் மேற்கு பசிபிக் பெருங்கடல், அவுஸ்திரேலியா, ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா, கிழக்கு தென் அமெரிக்கா, வடகிழக்கு வட அமெரிக்கா, அட்லாண்டிக் பெருங்கடல், இந்தியப் பெருங்கடல், தென் பசிபிக் பெருங்கடல் பகுதிகளில் சந்திர கிரகணம் தெரியும்.

மேலும் நிலவின் பிரகாசம் மற்றும் நிறத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லைஎன்றும்மையம்தெரிவித்துள்ளது.சூரியன்,சந்திரனுக்கிடையில் பூமி வரும்போதும், மூன்றும் ஒரே திசையில் வரும்போது பௌர்ணமி நாளில் சந்திர கிரகணம் ஏற்படுகிறது.

முழு நிலாவும் பூமியின் நிழலின் கீழ் வரும்போது முழு சந்திர கிரகணமும், நிலவின் ஒரு பகுதி பூமியின் நிழலில் வரும்போது மட்டுமே பகுதி சந்திர கிரகணமும் நிகழும் என்று ஆர்தர் சி. கிளார்க் மையம் கூறுகிறது. பகுதி சந்திரகிரகணம் இலங்கை நேரப்படி ஒக்டோபர் 28 ஆம் திகதி 23.31 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

பகுதி சந்திர கிரகணம் அக்டோபர் 29 அதிகாலை 01.05 மணிக்கும், அதிகபட்ச சந்திர கிரகணம் 29 அதிகாலை 01.44 மணிக்கு 05 வினாடிகளிலும் தெரியும். பகுதி சந்திர கிரகணத்தின் முடிவு 29 அதிகாலை 2.22 மணிக்கு நிகழும் என்றும், பெனும்பிரல் சந்திர கிரகணம் அதிகாலை 03.56 25 வினாடிகளுக்கு நிகழும் என்றும் ஆர்தர் சி கிளார்க் மையம் தெரிவித்துள்ளது.

## பாடசாலை விடுமுறை தொடர்பில் அறிவிப்பு

இதன்படி, சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணை (27) முடிவடைந்துள்ளது.

மூன்றாவது பாடசாலை தவணை எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

# சினி துளிகள்



## பாண்டியன் ஸ்டோர்ஸ் முடிந்தது

விஜய் தொலைக்காட்சி என்று நினைத்தாலே ஒரு சில சீரியல்கள் நம் கண்முன் வந்து நிற்கும். அப்படி நமக்கு முதலில் நியாபகம் வரும் தொடர்களில் ஒன்று தான் பாண்டியன் ஸ்டோர்ஸ்.

கடந்த 2018ம் ஆண்டு அக்டோபர் 1ம் திகதி இந்த தொடர் அண்ணன்-தம்பிகள் 3 பேரையும் பாசமாக பார்த்துக் கொள்ளும் அண்ணனின் மனைவி என்ற புரொமோவுடன் தொடங்கியது.

இடையில் அவ்வப்போது சுமாரான கதைக்களம் வரும், பின் மீண்டும் கதை மாற தொடருக்கும் TRP அதிகமாகும். இப்படியே போய் தொடர் 5 வருடத்தை எட்டிவிட்டது. ரசிகர்களும் சீரியல் குழுவினருக்கு பாராட்டுக்கள் தெரிவித்து வந்தனர்.

இந்த நிலையில் தொடர் முடிவுக்கு வந்துவிட்டது. 28 அக்டோபர் 2023 பாண்டியன் ஸ்டோர்ஸ் சீரியலின் கடைசி எபிசோட் ஒளிபரப்பாகிய நாள். குடும்பத்தினர் அனைவரும் கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்ததோடு தொடரை முடித்துள்ளனர்.

## கமல் படத்தில் இணைந்த குஷ்புவின் மகள்

கமல் மற்றும் மணிரத்னம் கூட்டணி நாயகன் படத்திற்கு பிறகு 35 வருடங்கள் கழித்து தற்போது மீண்டும் கூட்டணி சேர்ந்து இருக்கின்றனர்.

கமலின் 234 வது படமான இதன் பூஜை சமீபத்தில் நடந்து முடிந்தது. அதன் புகைப்படங்களும் இணையத்தில் வைரல் ஆகி இருந்தது.

நடிகை குஷ்பு மற்றும் சுந்தர்.சி ஆகியோரின் இளைய மகள் அனந்திதாவும் KH 234 படத்தில் இணைந்து இருக்கிறார்.
அவர் மணிரத்னத்தின் துணை இயக்குனராக பணியாற்ற இருக்கிறார் என தகவல் வெளியாகி இருக்கிறது. குஷ்பு தனது மகளை நினைத்து பெருமைப்படுவதாக போட்டோ வெளியிட்டு இன்ஸ்டாகிராமில் பேசி இருக்கிறார்.





## தங்கலான் படத்தின் ரிலீஸ் திகதியை அறிவித்த படக்குழு

இயக்குனர் பா.ரஞ்சித் இயக்கத்தில் விக்ரம் நடிப்பில் உருவாகி வரும் தங்கலான் படத்தின் படப்பிடிப்புகள் அனைத்தும் முடிவடைந்த நிலையில், தற்போது போஸ்ட் புரொடக்‌ஷன் தீவிரமாக நடந்து வருகிறது.

கோலார் தங்க சுரங்கத்தில் தமிழர்களுக்கு நடந்த கொடுமைகளை அடிப்படியாக வைத்து இப்படத்தின் கதைக்களம் அமைந்துள்ளது என்று சொல்லப்படுகிறது.

இந்நிலையில் தங்கலான் படம் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 26 திகதி வெளியாக இருக்கிறது என்று படக்குழு அறிவித்துள்ளது. மேலும் இப்படத்தின் டீசர் வருகிற நவம்பர் 1 திகதி வெளியாகும் என்றும் பதிவிட்டுள்ளது.



## வேலாயுதம் வெளியாகி 12 வருடங்கள்

இயக்குனர் மோகன் ராஜா இயக்கத்தில் விஜய் நடிப்பில் கடந்த 2011 -ம் ஆண்டு வெளியான திரைப்படம் தான் வேலாயுதம்.

இப்படத்தில் ஹன்சிகா, சரண்யா மோகன், ஜெனிலியா, சூரி, சந்தானம் எனப் பல முன்னணி பிரபலங்கள் நடித்து இருந்தனர்.

இந்நிலையில் 12 வருடத்திற்கு முன்பு விஜய்யின் வேலாயுதம் செய்த வசூல் விவரம் குறித்து தகவல் வெளியாகி இருக்கிறது. அதில் இந்த படம் ரூ.60 கோடி வசூல் செய்ததாக கூறப்படுகிறது.






## சூர்யா 43 டைட்டில் வெளியானது

சூரரைப் போற்று படத்திற்கு பிறகு சூர்யா மற்றும் சுதா கொங்கரா மீண்டும் கூட்டணி சேர இருப்பதாக ஏற்கனவே தகவல் வந்த நிலையில் தற்போது அந்த படத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளிவந்து இருக்கிறது.

சூர்யா உடன் இந்த படத்தில் நடிகர் துல்கர் சல்மான், நஸ்ரியா ஆகியோர் நடிக்க இருக்கின்றனர். மேலும் தமன்னாவின் காதலர் விஜய் வர்மா ஒரு முக்கிய ரோலில் நடிக்கிறார்.

வீடியோ உடன் சூர்யா 43 படத்தின் அறிவிப்பு வெளிவந்திருக்கும் நிலையில், படம் கேங்ஸ்டர் கதை என்பது அந்த வீடியோவே உறுதி செய்கிறது. படத்திற்கு புறநானூறு என டைட்டில் வைத்து இருக்கின்றனர். இந்த அறிவிப்பை சூர்யா ரசிகர்கள் தற்போது கொண்டாடி வருகின்றனர்.

ஜீ.வி.பிரகாஷ் இந்த படத்திற்கு இசையமைக்கும் நிலையில் இது அவருக்கு 100வது படம் என்பது குறிப்பிடத்தக்கது.

## தளபதி விஜய் பட இயக்குனருடன் கைகோர்க்கும் சிவகார்த்திகேயன்

சிவகார்த்திகேயன் தற்போது ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் SK 21 நடித்து வருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்ற வர, அடுத்ததாக அயலான் திரைப்படம் திரைக்கு வரவுள்ளது.

அடுத்த ஆண்டு பொங்கல் விருந்தாக அயலான் வெளியாகும் என அறிவித்துள்ளனர். இதனால் ரசிகர்களும் மகிழ்ச்சியில் உள்ளனர். சமீபத்தில் வெளிவந்த அயலான் படத்தின் டீசர் கூட நல்ல வரவேற்பை பெற்றது.

SK 21 படத்தை தொடர்ந்து அடுத்ததாக ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் SK 22 படத்தில் நடிக்கவுள்ளார். இப்படத்தின் அறிவிப்பும் சமீபத்தில் தான் வெளிவந்தது.
இந்நிலையில், இதை தொடர்ந்து சிவகார்த்திகேயன் நடிக்கவுள்ள புதிய படத்தின் தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, வெங்கட் பிரபு இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிக்கப்போவதாக கூறப்படுகிறது.

தளபதி 68 படத்தை இயக்கிவரும் வெங்கட் பிரபு இப்படத்தை தொடர்ந்து சிவகார்த்திகேயனுடன் தான் கைகோர்க்க போவதாகவும், இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என தகவல் வெளியாகியுள்ளது. ஆனால் இது எந்த அளவிற்கு உண்மையான தகவல் என்று தெரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



சுழியோடி

24

அப்பையா அண்ணா விடுதலைப் புலிகளின் ஆரம்பகால உறுப்பினர். இவர் வரலாறு குறித்து விடுதலைப்புலிகளின் பார்வை இவ்வாறு இருக்கிறது.

1982ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொன்னாலை பாலத்தில் வைத்து சிறிலங்கா படையினர் வாகனம் ஒன்றின் மீது போராளிகளால் கண்ணிவெடி தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. ஆனால் தாக்குதலுக்கு உள்ளான எதிரி வாகனம் மயிரிழையில் உயிர் தப்பியது. தப்பித்துக்கொண்ட எதிரிகள் போராளிகளை துரத்தியபடி அவ்விடத்தை சூழவும் சல்லடை போட்டனர். தாக்குதலுக்காக பயன்படுத்தப்பட்ட மின்பிறப்பாக்கி எதிரியின் கையில் சிக்கிவிட்டது.

அதை வல்வெட்டித் துறையிலுள்ள கடையொன்றில் கொள்வனவு செய்துள்ள இராசையா என்ற அப்பையா அண்ணா அன்றிலிருந்து யாழ்ப்பாணம் எங்கும் பிரபல்யமாக தேடப்பட்ட ஒருவரானார்.

1983ஆம் ஆண்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருநெல் வேலி தாக்குதலில் பங்குபற்றிய போராளிகளுள் அப்பையா அண்ணையும் ஒருவர். தமிழர்களின் விடிவிற்கான போரின் படிக்கட்டாக அமைந்த அந்த கண்ணிவெடியின் பொறிமுறைகளை சரி பார்த்து செல்லக்கிளி அம்மான் கைகளில் ஒப்படைத்திருந்தவர் அவர்தான்.

அந்த வரலாற்று தாக்குதலின் நினைவுகளை மூத்த தளபதி கேணல் கிட்டு அவர்கள், களத்தில் என்னும் ஏட்டில் எழுதியவற்றை மீட்டி நிற்பது இங்கு பொருத்தமாக இருக்கும்.

1983ஆம் ஆண்டு யூலை மாதம் (21)ம் நாள் இரவு (11.00) மணியளவில் யாழ் திருநெல்வேலியில் வைத்து சிறிலங்கா படையினர் மீது ஒரு கண்ணிவெடி தாக்குதலை நடத்தவென குறிப்பிட்ட வாகன மொன்றில் தேசியத்தலைவர் அவர்களும் அவருடன் செல்லக்கிளி அம்மான், விக்ரர், பொன்னம்மான், சந்தோசம் மாஸ்டர், புலேந்தியம்மான், கருணாஸ், ரஞ்சன், லிங்கம் பசீர்காக்கா, நான் மற்றும் சில தோழர்களும் அடங்கிய எமது தாக்குதல் குழுவில் ஒருவராக ஐம்பது வயதை அடைந்துவிட்ட அப்பையா அண்ணரும் அங்கம் வகித்தார்.

நாம் திட்டமிட்டபடி தாக்குதலுக்கான இடத்தை அடைந்ததும் எல்லோரும் வாகனத்தை விட்டு கீழே இறங்குகிறோம், அடுத்ததாக அங்குள்ள ஒரு இடத்தில் கண்ணிவெடி தொகுதியை புதைக்கவேண்டும். அப்பையா அண்ணரும், செல்லக்கிளி அம்மானும், விக்ரரும், கண்ணிவெடிகளை புதைக்க ஆரம்பிக்கின்றனர்.

கண்ணிவெடியை புதைப்ப தென்பது ஒரு பெரிய வேலை. அதாவது கரடுமுரடான தார் ரோட்டில் பிக்கானால் கிடங்கு வெட்டுவது என்பது மிகவும் கடினமான வேலை. அதிலும் கண்ணிவெடி தொகுதிகளுக்கான மருந்தை அடைப்பதென்பது அதைவிட பெரிய வேலை. ஏனெனில் வெடிமருந்துகள் ஆபத்தானவை. எல்லோருக்கும் அந்த வேலை ஒத்துவரமாட்டாது.

எனவே வெடிமருந்துடன் நன்கு பழக்கப்பட்ட அப்பையா அண்ணன் அந்த வேலையை திட்டத்திற்கு ஏற்ப மிகவும் வேகமாகவும் அதேவேளை நிதானமாகவும் திறம்பட செய்து முடித்தார். இவைக்கப்பால் அப்பையா அண்ணர் எமது இயக்கத்திலேயே வயது முதிர்ந்த உறுப்பினர் ஆவர். இருந்தபோதிலும் அவர் மிகவும் சுறுசுறுப்பாகவும் விவேகத்துடனும் சதா இயங்கிக்கொண்டு இருப்பார். அத்தோடு எமது உள்ளூர் தயாரிப்புகளில் முக்கிய வெடிமருந்து நிபுணராகவும் அவர் விளங்கினார் என மூத்த தளபதி கிட்டு அவர்கள் அதில் குறிப்பிட்டிருந்தார்.

அதன் பின்னரான காலங்களில் இந்தியாவிற்கு பயிற்சிக்கு சென்ற போராளிகளுடன் அப்பையா அண்ணையும் ஒருவராக இணைந்திருந்தார். எப்படியாவது தானும் ஒரு இராணுவ பயிற்சிபெற்ற ஒரு வீரனாக உருவாக வேண்டுமென்று அவர் ஆவல் கொண்டிருந்தார்.

ஆனால் இவரது வயதை கருத்தில் கொண்ட இந்திய பயிற்சி அதிகாரிகள் அவரை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். இருந்தபோதும் நாடு திரும்பிய அப்பையா அண்ணர் போராளியாகவே தொடர்ந்து பணியாற்றினார். அவரது விடுதலை பணிக்கு இராணுவ பயிற்சி என்றுமே ஒரு தடையாக இருந்தது இல்லை. ஆரம்பகாலங்களில் தாக்குதலில் பங்கெடுத்த கண்ணிவெடிகள் பல அப்பையா அண்ணையின் கரங்கள் தழுவப்பெற்றவை.

வன்னி பகுதியில் நடந்த தாக்குதல்களிலும் அவர் பங்கெடுத்தார். அப்பையா அண்ணையின் கண்டுபிடிப்பு முயற்சிகள் இயக்கத்தில் பிரபலமாக பேசப்படுபவை. அவற்றில் பல களத்தில் பயன்படுத்தப்பட்டவையாக இருந்தபோதும் கூட இளம் போராளிகளிடையே இத்தகைய முயற்சிகளை ஊக்குவித்து இயக்கத்தில் அத்தகைய ஒரு மரபை வளர்த்தெடுக்கும் தலைவர் அவர்களின் எண்ணத்திற்கு அப்பையா அண்ணையின் அத்தகைய முயற்சிகள் வாய்ப்பாக அமைந்தன. அது பின்னைய காலங்களின் இயக்கத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியது.

பிற்காலங்களில் அந்த முதிய போராளி மிகவும் இளைத்து போயிருந்தார். எந்த பணியாற்றவும் அவரால் முடியாதிருந்தது. எமது வரலாற்றில் பெருமைக்குரியவராக இருந்த அவர் (24-12-1997) மல்லாவி பகுதியில் காணாமல் போயிருந்த அவருக்கு நேர்ந்த கதி என்னவென்று தெரியவில்லை.

ஜெயசுக்குறு நடவடிக்கை யின் மூலம் சிங்கள படைகள் வன்னியில் அகல கால் பதித்திருந்த நேரம் வயதால் முதிர்ந்த நோய்களால் தளர்ந்து போயிருந்த அப்பையா அண்ணனை சிறிலங்கா படைகளின் கைக்கூலிகள் கடத்திச் சென்றுவிட்டனர். அன்றிலிருந்து அவரை தேடி விடுதலைப்புலிகள் வலைவிரித்திருந்தனர்.

அவரது சாவை உறுதிப்படுத்தி மக்களுக்கு அறிவிப்பதற்கு விடுதலைப் புலிகளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு மேல் சென்றது. ஆனால் சாவு அறிவித்தலை ஒவ்வொருவரும் எந்த ஆதாரமும் இல்லாமல் தங்கள் எண்ணம்போல் விட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

அப்பையா அண்ணா எமது ஆரம்பகால செயற்பாடுகளில் சாட்சியாக இருந்தவர். மக்களோடு மக்களாக தலைமறைவு வாழ்வில் இயக்கம் இருந்த காலங்களில் போராளிகளுக்கு பெரும் பலமாக இருந்து செயல்பட்டவர்.

அன்றைய காலங்களில் கண்ணிவெடி வெடிபொருள் உருவாக்கத்தில் முன்னின்று செயற்பட்டவர். அதனாலேயே அவரது பெயரில் வெடிபொருள் பயிற்சி கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது இந்திய இராணுவத்தால் சமாதான பேச்சுக்காக அழைத்து வரப்பட்டு கொல்லப்பட்ட லெப்.கேணல் ஜொனி நினைவாக உருவாக்கப்பட்ட ஜொனி மிதிவெடிகள், தொழிற்சாலை அமைக்கப்பட்டு அங்கு உற்பத்தியாக்கப்பட்டு கொண்டிருந்தன.

ஏனைய நாடுகளின் மிதிவெடிகளின் வடிவமைப்புக்கு அமைவாக தாக்குத்திறன் கூடிய மிதிவெடிகள் தயாரிக்கப்பட்டு அன்றைய முன்னணி களமுனைகள் எங்கும் விதைக்கப்பட்டன.

விடுதலைப்புலிகளின் இந்த மிதிவெடிகளால் படையினருக்கு பாரிய இழப்புக்கள் ஏற்படுகின்றன என்று சிறிலங்கா இராணுவ தரப்பு கூறிவந்தது உங்கள் நினைவுக்கு வரலாம்.

இவ்வாறுதான் மிதிவெடி களுடன் பொறிவெடிகளும் தயாரிக் கப்படுகின்றன. இவை படையினர் ஏவிய வெடிக்காத எறிகணைகளில் இருந்தே பெருமளவில் தாயரிக்கப்பட்டன.

வேட்டைக்காரர்களால் பயன் படுத்தப்படும் கட்டுக்குழாய் என்ற பொறிவெடி வன்னி காடுகளில் வாழ்ந்த பலரும் அறிந்தது.

இதற்கமைவாக படையினர் ஏவி வெடிக்காத 60மிமீ, 81மிமீ எறிகணைகள் பொறி வெடிகளாக மாற்றப்படுகின்றன. அதாவது இவற்றின் முன் வெடிப்பிகளின் பொறிவெடி முறை மாற்றி அமைக்கப்பட்டு காடுகளுக்குள் மறைத்துவைக்கப்பட்டு நூல் அல்லது கம்பி கட்டப்பட்டு அது தட்டப்படும் போது வெடிக்கும் வகையில் எதிரியின் உள்நுளைவுகளுக்கு தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன.



தொடரும்...

# பிரபாகரன் ஏன் போராட நிர்பந்திக்கப்பட்டார்? வரலாறுகளை மூடிமறைக்கிறது அரசு



சிங்களத் தலைவர்கள் பழைய தேசியக் கொடியையே புதிய தேசியக்கொடியாக வடிவமைத்தனர். இந்தக் கொடியை எதிர்த்து தமிழ்மக்கள் மஞ்சள் நிறத்திலான கொடியை தமது இடங்களில் ஏற்றினர். எஸ்.ஜே.வி செல்வநாயகம் என்ற தமிழ் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் தமிழர் தாயக கொடியினை ஏற்றி தனது காரில் பாராளுமன்றத்திற்கு சென்றார். பின் சிங்கள அரசு தேசியக்கொடியில் இரண்டு வர்ணங்களைச் சேர்த்து. பச்சை வர்ணம் முஸ்லிம்களையும், செம்மஞ்சள் தமிழர்களையும் குறிப்பதாக அமைந்தது.

இப்படியாக இனவாதப் போராட்டம் சுதந்திரம் கிடைத்ததிலிருந்தே ஆரம்பமானது. இலங்கையில் உள்ள முக்கிய கட்சிகளும் பாரம்பரிய சிங்கள குடும்பங்களிலிருந்தேவந்தவையாகும். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சியை பொறுத்தவரையில், பண்டாரநாயக்க குடும்பம். ஐக்கிய தேசியக் கட்சியை பொறுத்தவரையில் D.S சேனநாயக்க குடும்பம். அதிகாரம்மிக்க பணக்காரர் குடும்ப வர்க்கத்தினை உடையவர்கள். அரசியலில் ஆளுமையை நிலை நிறுத்த குடும்பங்களுக்கிடையே மோதல்கள் ஏற்படும்.

தமிழர் பிரச்சினை ஒரு பகடைக்காயாக பயன் படுத்தப்படுகிறது. 1948ம் ஆண்டு பிரதமர் D.S சேனநாயக்க, இந்திய – பாகிஸ்தான் குடியுரிமைச் சட்டத்தின் மூலம் இந்திய வம்சாவழி தோட்டத்தொழிலாளர் குடியுரிமையை பறிக்க நினைத்தார். டிசம்பர் 10 பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடந்தது. 19 தமிழ் உறுப்பினர் எதிர்த்ததால் இச்சட்டத்தை தடுக்கமுடியவில்லை. ஒரேநாளில் 10 இலட்சம் தமிழ் மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது.

நாட்டின் பொருளாதாரத்தினை உயர்த்த பல தலைமுறைகளாக உழைத்த தமிழர்களை தொடர்ந்தும் ஆட்சிக்குவந்த அரசாங்கங்கள் வலுக்கட்டாயமாக நாட்டைவிட்டு வெளியேற்றின. 1949ல் தோட்டத் தொழிலாளர்களுக்கு குடியுரிமை, வாக்குரிமை இல்லை என்றனர். பல தமிழர்கள் சிலோன் காங்கிரஸில் இருந்து வெளியேறி தமிழரசுக்கட்சியை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையில் ஆரம்பித்தனர். 1953ல் அரசியல் ரீதியாக சேனநாயக்கவை புறந்தள்ள சிங்களவரும், தமிழர்களும் சமமானவர்கள் என கூறிய பண்டாரநாயக்கா தான் வெற்றி பெற்றால் 24 மணித்தியாலயத்திற்குள் சிலோனை பௌத்த நாடாக மாற்றுவேன் என்றும், சிங்களம் மட்டுமே அரச மொழியாக இருக்கும் என்றும் சிங்களவர் அல்லாதோரின் ஆளுமைகள் ஒடுக்கப்படும் என்றும் அறிவித்திருந்தார்.

1956ல் பண்டாரநாயக்கவின் ஒட்டுவங்கி அரசு வெற்றி பெற்றது. தன்னை சிங்கள இன பாதுகாவலன் என அறிவித்தார். அவரின் ஆட்சி இரு உறவுகளுக்குமிடையில் பெரிதும் பாதித்தது. சிங்களம் மட்டுமே அரச மொழி என சட்டம் இயற்றி, தமிழர் பகுதிகளுக்கும் இது பொருந்தும் என்றார். கம்யூனிஸ்ட் கட்சியின் R.B சில்வா பாராளுமன்றத்தில் ஒரு மொழி என்றால் இரு நாடுகள் மலரும் என்று அழுதுகொண்டே கூறினார். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சிங்கள இனவாதிகள் அவரைத் தாக்கினர். பின்னாளில் அரங்கேறப்போகும் இரத்தச்சரித்திரம் அன்றுதான் ஆரம்பமாகியது. தமிழ் சிங்கள சட்டத்தினை எதிர்த்த கம்யூனிஸ்ட் கட்சியின் வீடுகள் தாக்கப்பட்டன. கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மக்களுக்காக குரல்கொடுப்பதை படிப்படியாக குறைத்துக்கொண்டது. ஜூன் 5, 6ம் திகதிகளில் தமிழர் மீது முதற் தாக்குதல் ஆரம்பித்தது. பின்னர் தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்திற்கும் பரவியது. 150 தமிழர்கள் கொல்லப்பட்டனர். பல சொத்துக்களும் சூறையாடப்பட்டது. தமிழர்கள் தங்களது எதிர்ப்பினைத் தெரிவித்தனர். பின்னர் இலங்கையரசு மக்கள் தொகை விகிதாசாரத்தினை மாற்ற தீவிரமாக செயற்பட்டது.

படிப்படியாகத் திட்டமிட்டு தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டது. இப்பகுதிகளில் சிங்களவரின் விகிதாசாரங்கள் அவர்களுக்குச் சாதகமாக அமையக்கூடியது. விவசாய அபிவிருத்தி என்ற பெயரில் 44 புதிய சிங்களக் கிராமங்கள் கிழக்கு மாகாணத்தில் உருவாக்கப்பட்டது. அதில் 06 கிராமங்கள் மட்டுமே தமிழர்களுக்கு வழங்கப்பட்டது. திருகோணமலை மாவட்டத்தில் காடுகள் அழிக்கப்பட்டு நீர்ப்பாசன வசதிகள் உருவாக்கப்பட்டு சிங்கள குடியேற்றங்கள் அமர்த்தப்பட்டது. தென்பகுதியில் மீனவர்களை சிங்கள அரசு இடையிடையே குடியமர்த்தியது.

இத்தகைய குடியமர்த்தல்களே மோதல்களுக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. மெதுமெதுவாய் உருவாக்கப்பட்ட கலவரங்கள், கோவிலில் உறங்கிக் கொண்டிருந்த குருக்களை தீ மூட்டிக்கொழுத்திய சம்பவமும், தமிழர்களை உலுக்கிய மற்றுமொரு சம்பவமாக, ஒரு குழந்தையை கொதிக்கின்ற தாரில் போட்ட சம்பவமுமாகும். தமிழ் இளைஞர்கள், சிங்கள மக்களை ஏன் எதிர்த்து தாக்கக்கூடாது என்ற கேள்வியை எழுப்பினர். செல்வா தமிழர் மாநாடு ஒன்றினைக் கூட்டினார். தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற இலங்கையரசிற்கு ஓராண்டு கால அவ காசம் வழங்கினார்.

ஜூலை 26, 1957 அரசு ஒரு சமாதானத்திற்கு வந்து, பண்டாரநாயக்க - செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதில் அரசின் சில வாக்குறுதிகளாக, தமிழர் பகுதிகளில் சிங்கள குடியேற்றங்களை அரசு கைவிடும், தமிழ் மொழியும் அரச மொழியாக சட்டம் நிறைவேற்றப்படும், வடகிழக்கு மாகாணங்களில் பிராந்திய மொழியாக இருக்கும். பிராந்திய சபைச் சட்டங்கள் மூலம் பிராந்திய சட்ட உரிமைகள் வழங்கப்படும். ஜே.ஆர்.ஜெயவர்த்தன இதனை எதிர்த்து கொழும்பிலிருந்து கண்டியிலுள்ள பண்டாரநாயக்கவின் இல்லத்திற்கு நடை பயணம் மேற்கொண்டார்.

இதன் விளைவாக தமிழ் ஆட்சிமொழியானதே தவிர மற்ற எதுவும் நிறைவேற்றப்படவில்லை. 1958ல் தமிழர் பகுதிகளிலும் வாகனப் பதிவேட்டில் சிங்கள எழுத்துக்கள் பயன்படுத்தவேண்டும் என கேட்டுக்கொண்டது அரசு. தமிழர்கள் இதனை தார்கொண்டு மறைத்தனர். இதனால் மே 25ல் தமிர்களுக்கெதிரான கலவரம் மீண்டும் ஆரம்பமாகியது. பொலநறுவையில் ஆரம்பித்து கொழும்பு, அநுராதபுரம், யாழ்ப்பாணம் என பரவி 400 தமிழர்கள் வரை கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து பண்டாரநாயக்கா தமிழர் பகுதிகளில் தமிழை மட்டும் பயன்படுத்த ஒப்புக்கொண்டார்.

இதனை எதிர்த்து பௌத்த துறவிகள் அவரின் இல்லத்தின் முன்னால் போராட்டங்களை நடத்தி, அவரை சிங்கள எதிரி என வர்ணித்து பண்டாரநாயக்கா செல்வா ஒப்பந்தத்தை கைவிடவும் வலியுறுத்தினர். இதனை எதிர்த்த தமிழர்களை இனவாதிகள் தாக்கினர். எங்கும் கலவரங்கள் இடம்பெற்றது. 1959ல் நிலைமையை கட்டுப்படுத்த முடியாமல் போக, எதிர்ப்புக்களை மீறி ஒப்பந்தத்தை அமுல்படுத்த முயன்றார். செப்டெம்பர் 25ல் சோமராம தேரர் என்ற பௌத்த துறவியினால் பண்டாரநாயக்கா அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார். 1960ல் பண்டாரநாயக்காவின் மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் பிரதமரானார். ஜனவரி 01ல் தமிழர் பகுதிகளிலும் சிங்கள மொழியே அரச கரும மொழி என அறிவித்தார்.

ஜனவரி 02ல் செல்வா இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒரு நாள் கடை அடைப்புக்கும் அழைப்புவிடுத்தார். இந்தப் போராட்டம் பல இடங்களுக்கும் பரவியது. அரச அலுவலகங்களுக்கு வெளியில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் போராட்டங்களை நடத்தினர். 50 நாட்களுக்கும் மேலாக இது தொடர்ந்தது. தமிழ் மக்கள் மீது பொருளாதாரத் தடையை ஏற்படுத்த, இலவச அரிசியினை வழங்க மறுத்தது அரசு. தந்தை செல்வா சட்ட எதிர்ப்பு போராட்டத்தினை அறிவித்தார்.

1961 ஏப்ரல் 14 தமிழ் வருடப்பிறப்பன்று, தமிழர் பகுதிகளுக்கான தபால் சேவைகளை அறிவித்து தமிழீழ தபால் தலையை வெளியிட்டார் தந்தை செல்வா. பத்தாயிரத்திற்கும் மேலானோர் வரிசையில் நின்று அதனைப் பெற்றுக்கொண்டனர். ஏப்ரல் 17 அன்று அவசரகாலநிலையை பிர கடனம் செய்து, அனைத்து தமிழ்த் தலைவர்களையும் கைது செய்து, 03 ஆண்டுகள் தடைசெய்தது இலங்கையரசு.

1965ல் இரண்டு கட்சிகளும் அரசமைக்க ஆசனங்கள் போதுமானதாக இல்லை. டட்லி சேனாநாயக்க தமிழரசின் ஆதரவினைக் கேட்க, செல்வாவிற்கு கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக டட்லி உறுதியளித்து ஆதரவினைப் பெற்றார். சில கட்சிகளின் தமிழீழ கோரிக்கைகளை செல்வா நிராகரித்தார். ஒன்றுபட்ட இலங்கையில் தமிழ் மாநிலம் போதும் என்றார்.


பம்பலபிட்டி பௌத்த விகாரையில் உள்ள பௌத்த பிக்குவின் அறிக்கையில், அரசு வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு படைகளை அனுப்பி தமிழர்களை வெளியேற்றி சிங்களவர்களை குடியேற்றவேண்டும் என்றார். அரசும் அவரின் கோரிக்கைகளை அமுல்படுத்த முனைந்தது. செல்வா அரசிற்கு வழங்கிவந்த ஆதரவினை திரும்பப்பெற முற்பட்டார். டட்லி உடனே ஒரு சமாதானத்திற்கு வந்து இரண்டாவது முக்கிய ஒப்பந்தமான டட்லி - செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

முந்தைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதுடன் தமிழர் பகுதிகளில் மாகாண சபைகள் உருவாக்கப்படும் என்றும் உறுதியளித்தார். அரசு வெள்ளையறிக்கையிலும் இதனை வெளியிட்டது. மீண்டும் பௌத்த மதத்தினர் இதனை தடுத்தனர். 1968ல் ஒப்பந்தம் அமுலாக்கப்படாததை கண்டித்த செல்வா, அரசிற்கு கொடுத்துவந்த ஆதரவினை திரும்பப்பெற்றார். தமிழ் இளைஞர்கள் மிதமான போராட்டங்கள் இனி பயன்பெறாது, ஆயுதப்போராட்டமே பயனளிக்கும் என நினைக்க ஆரம்பித்தனர். இந்த எண்ணவோட்டத்திற்கு சிவகுமாரன் என்கின்ற இளைஞனே முக்கிய காரணமாக இருந்தார்.

தொடரும்...

கழியோடி

# ஜனாதிபதி தேர்தல் ஒன்றுக்காக, நாட்டு மக்களைத் தயார்படுத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



ஏற்கனவே நடந்து முடிந்திருக்க வேண்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை. திட்டமிட்ட ரீதியில் ஒத்திப்போட வைத்து. போக்குக் காட்டிவரும் ரணில். இந்த ஆண்டு இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு ஆரம்பத்தில். ஜனாதிபதி தேர்தலை நடத்தி. அதில் வெற்றிபெற நினைக்கிறார். அதற்காக. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து. பிரபலமான முகங்களை எல்லாம் கழட்டி எடுக்கும் வேலைகளில் கவனமாக இருக்கிறார். அதன் ஒருகட்டமாக. ஹர்ச டி சில்வா. எரான் விக்கிரமரட்ன. கபீர் ஹாசிம் உள்ளிட்டவர்கள். ரணிலோடு இணைந்து. முக்கிய அமைச்சுப் பொறுப்புகளை ஏற்பார்கள் என்று புனைவுச் செய்திகள் பரப்பப்படுகின்றன.

பாராளுமன்றத்தில் இருக்கும் பொருளாதார நிபுணர்களாக கருதப்படுபவர்களில். ஹர்சவும் எரானும் முக்கியமானவர்கள். அவர்களைத் தேர்தல் அரசியலுக்கு அழைத்து வந்தவர் ரணில்தான். கடந்த பொதுத் தேர்தலில். ரணிலோடு முரண்பட்டுக் கொண்டு சஜித் அமைத்த ஐக்கிய மக்கள் சக்தியில் அவர்கள் இருவரும் இணைந்தாலும். ரணில் மீது 'அரசியல் குரு' என்ற ரீதியில் மரியாதை வைத்திருப்பவர்கள். ராஜபக்ஷர்களை விரட்டும் போராட்டத்தை அடுத்து. மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியிலிருந்து விலகினார் அப்போது. ரணில் பிரதமரானார்.

அந்தத் தருணத்தில். புதிய அரசாங்கமொன்று அமைக்கப்பட்டிருந்தால். அதாவது ரணில் தலைமையிலான அரசாங்கம். குறிப்பாக ராஜபக்ஷ ஆதரவு இல்லாமல் அமைக்கப்பட்டிருந்தால். அதில் ஐக்கிய மக்கள் சக்தியில் பெருமளவான உறுப்பினர்கள் இணைந்து கொண்டிருப்பார்கள். ஆனால். அது சாத்தியமாகவில்லை.

ரணில் பிரதமராகி. தன்னை ஜனாதிபதி பதவிக்காக தயார்படுத்திக் கொண்டிருந்த காலப்பகுதியில். கோட்டபாய ராஜபக்ஷவை துரத்தியடிக்கும் போராட்டத்தை ஊக்குவிக்கும் வேலைகளில் ஈடுபட்டிருந்தார். அப்போது. அவர் மஹிந்தவோடு மிக இரகசியமான. திட்டங்கள் வகுத்து இணைந்து இயங்கினார். அதனால்தான். ஜனாதிபதி பதவியில் இருந்து. கோட்டா தப்பியோடும் நிலை ஏற்பட்டது.

மஹிந்தவுக்கும் ரணிலுக்கும் இடையிலான இணக்கப்பாடு என்பது. நாமல் ராஜபக்ஷவின் அரசியல் எதிர்காலத்தை பாதுகாப்பது என்ற ஒன்று மட்டுமே ஆகும். அதற்காக. ரணில் இழுக்கும் எந்தத் திசைக்கும் நகர்வதற்கு மஹிந்த தயாராக இருந்தார். அதனால்தான். பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்வில். பொதுஜன பெரமுனவின் ராஜபக்ஷ கட்டுப்பாட்டில் இருந்த உறுப்பினர்கள் ரணிலை ஆதரித்தார்கள். ரணில் வென்றதும். மஹிந்தவின் இல்லம் தேடிச் சென்று. சில மணிநேரம் பேசிவிட்டும் சென்றார்.

ரணிலுக்கும் மஹிந்தவுக்கும் இடையிலான இந்த இணக்கப்பாடு. பொது வெளியில் அப்பட்டமாக வெளிப்பட்டதால் மட்டுமே. ஐக்கிய மக்கள் சக்தியை விட்டு செல்வதற்கு பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தயங்கினார்கள். ஏனெனில். பொதுத் தேர்தல் ஒன்று வரும் போது. ராஜபக்ஷர்களோடு இணக்கத்தோடு இருக்கும் ரணில் அரசாங்கத்தில் இணைந்து கொண்டவர்களை. மக்கள் ஏற்றுக்கொள்வதற்கு தயங்குவார்கள். அதனால். தோல்வியடைய வேண்டி வரலாம் என்று எண்ணினார்கள். அதனால். பொதுத் தேர்தல் வரும் வரையில். எதிரணியில் இருப்பதுதான் தேர்தல் வெற்றியை இலகுவாக்கும். இந்த ஒற்றைக் காரணத்தைத் தவிர. சஜித் தலைமைக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதோ. ராஜபக்ஷர்கள் கூட்டை நிராகரிக்க வேண்டும் என்பதோ. ஐக்கிய மக்கள் சக்தியில் இருக்கும் பெரும்பாலான உறுப்பினர்களின் எண்ணம் அல்ல. பதவியைத் தக்க வைப்பது என்பது மட்டுமே ஒற்றைக் குறிக்கோள். அதனால்தான். ரணிலால் ஹரீன் பெர்ணான்டோ. மனுஷ நாணயக்கார தவிர வேறு யாரையும் சஜித்திடம் இருந்து அப்போது பிரிக்க முடியவில்லை.

ஆனால். தற்போது நிலைமை வேறு! அண்மித்த நாள்களில். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த ரணில் அனுமதிக்கப் போவதில்லை. அதுபோல. பொதுத் தேர்தலும் இப்போதைக்கு இல்லை. எப்படியும் ஜனாதிபதி தேர்தலை நடத்தி. அதில் வெற்றிபெற்றுவிட்டுத்தான். ஏனைய தேர்தல்கள் குறித்து அவர் சிந்திப்பார்.

அதனால். பொதுத் தேர்தல் ஒன்றை நோக்கி நகர்வதற்கு காலம் போதாது. எதிர்க்கட்சியில் இருப்பதால் பலனில்லை. அதனால் ரணில் அழைப்பை ஏற்று. அமைச்சுப் பதவிகளை ஏற்பதுதான் இப்போது இருக்கும் வழியென்று எதிரணி உறுப்பினர்கள் கருதலாம். அதனை. உத்தியாக்கி ஹர்ஷ. எரான் போன்றவர்களை இழுத்தெடுக்கலாம் என்று காய்களை நகர்த்துகிறார் ரணில். அதில் அவருக்கு பெரும் இலாபமே இருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் உதவியை ரணில் பெற்றுவந்து இருக்கிறார் என்பதை. பெரிய வெற்றியாக வெடி கொளுத்தி. தென் இலங்கையில் சில பகுதிகளில் கொண்டாடினார்கள். ஓர் ஆட்சியாளர் கடன் பெறுவதை. அதுவும் மக்கள் மீது மீள முடியாத வரிகளை விதிக்கும் கண்டிப்பான வரையறைகளுடனான கடனைப் பெறுவதை. வெடி கொளுத்தி கொண்டாடும் நிலைமைதான் நாட்டில் இருக்கிறது என்றால். அதன் யதார்த்தம் எப்படிப்பட்டது என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

அப்படிப்பட்ட அரசியலைத்தான் தென் இலங்கை இவ்வளவு காலமும் புகட்டி வந்திருக்கிறது. ராஜபக்ஷர்கள் சீனாவிடமும் ஏனைய நாடுகளிடமும் பில்லியன்களில் கடன்களை வாங்கி. தங்களின் தேர்தல் வெற்றிகளை இலக்காக்கி நாட்டை சீரழித்தார்கள். அந்தச் சீரழிவின் கொடுங்கரங்களில் இருந்து நாட்டு மக்களால் இன்னும் மூன்று. நான்கு தலைமுறைகளுக்கு மீளவே முடியாது.

அந்த உண்மையை சின்னதாக உணர்ந்துகொண்ட தருணத்தில். ராஜபக்ஷர்களை விரட்டுவதற்காக வீதிக்கு இறங்கினார்கள். அந்த மக்களில் ஒரு பகுதியினர் இன்றைக்கு. ரணில் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்கி வந்துவிட்டார் என்பதற்காக அவரை சாதனையாளராக நோக்குகிறார்கள்.

பல நேரங்களில் தென் இலங்கை சக்திகள். நோய்க்கான உண்மையான சிகிச்சைக்குப் பதில். வலி நிவாரணிகளை எடுத்துக் கொள்வதை விரும்புகிறார்கள். அந்த மனநிலையைத்தான். முதலாக வைத்து ரணில். ஜனாதிபதி தேர்தல் கணக்கைப் போடுகிறார்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு முதல் தொகுதி கடனை வழங்கியதும். இலங்கை ரூபாயின் பெறுமதி ஒரே நாளில் திடீரென அதிகரித்துக் காட்டப்பட்டது. ஒரு டொலருக்கு எதிராக 360 ரூபாயாக காணப்பட்ட இலங்கை ரூபாயின் பெறுமதி. 306 ரூபாயாக குறைந்தது. இந்தப் பெறுமதி அதிகரிப்பு என்பது திட்டமிட்ட ரீதியில் போலியாக உருவாக்கப்பட்டது. மறுபுறம். அத்தியாவசிய பொருட்கள் சிலவற்றின் விலைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. சமையல் எரிவாயு. எரிபொருட்களின் விலையும் குறைக்கப்பட்டு. மீண்டும் தற்போது விலையேற்றப்பட்டுள்ளது. மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

இவையெல்லாம். நாட்டின் எதிர்கால பொருளாதார நலன்கள் குறித்து சிந்தித்து எடுக்கப்பட்ட முடிவுகள் அல்ல. மாறாக. தேர்தல்களை இலக்கு வைத்து எடுக்கப்பட்ட முடிவுகள். இப்போதும் அந்த உத்தியை ரணில் கையிலெடுத்து இருக்கிறார். ஏற்கெனவே. கடன் வாங்கி வந்ததற்கே வெடிகொளுத்தி ஆரவாரம் காட்டிய மனநிலையுடைய மக்களை. விலை குறைப்பு நாடகம் இன்னும் இளக வைக்கும். தனக்கான வாக்காக மாறும் என்பது ரணிலுக்கு தெரியும். அவர். இப்போது அந்த அறுவடைக்காகத்தான் தயாராகி வருகிறார்.

அதனால்தான். எதிர்க்கட்சியில் இருக்கும் பொருளாதாரம் அறிந்தவர்கள் எல்லாம் தன்னோடு இணைந்திருக்கிறார்கள் என்ற விம்பத்தையும் அவர் காட்ட நினைக்கிறார். அதற்கு. எப்படியாவது ஹர்ச. எரான் உள்ளிட்டவர்களின் வருகையை அவர் அதிகமாக நம்புகிறார். இதன்மூலம். தன்னுடைய பொருளாதார திட்டங்கள் நாட்டை மீட்டெடுக்கும் என்று நம்பியதால்தான் அவர்கள். தன்னோடு இணைந்திருக்கிறார்கள் என்பதை மக்களிடம் பெரிய பிரசார உத்தியாக முன்வைக்க முடியும்.

மறுபுறம். ராஜபக்ஷ சகோதரர்களுக்கு இடையில் மிகப்பெரிய இழுபறி நீடிக்கிறது. உடலளவில் தளர்ந்துவிட்ட மஹிந்த. நாமல் ராஜபக்ஷவிடம் கட்சியை சேர்ப்பித்துவிட நினைக்கிறார். அதற்கு தடையாக இருக்கும் பசில் ராஜபக்ஷவை அரசியலில் செல்லாக்காசாக்குவதற்கு. ரணில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெல்வது மட்டுமே வழியாக இருக்கும்.

ரணில் வெற்றிபெற்றுவிட்டால். அவரை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. அவரது பதவிக்காலத்தில் பசிலால் எதுவும் செய்ய முடியாது போகும். அதனால். பொதுஜன பெரமுன முழுவதுமாக நாமலின் கைகளுக்குள் வந்துவிடும். அதனால். அடுத்த ஜனாதிபதி தேர்தல். பொதுத் தேர்தல்களில் ரணிலுக்கு ஒத்துழைப்பதுதான் அரசியல் ராஜதந்திரம். அதன் மூலம். நாமலுக்கான வழியை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

ஏனெனில். ரணிலுக்குப் பின்னால் ஐக்கிய தேசிய கட்சி பெரிய அளவில் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பில்லை. அதற்கு சஜித் குறுக்கே நிற்பார். அதுபோக. அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வென்றுபதவியேற்றாலும். அதன் பின்னர். ஜனாதிபதி தேர்தலில் ரணில் போட்டியிட வாய்ப்பில்லை. உடலளவில் அவரும் தளர்ந்துவிடுவார். அதனால். சஜித் எதிர் நாமல் எனும் அரசியல் சூழல் உருவாகும். அந்தப் போட்டியில் ராஜபக்ஷர்கள் அடையாளத்தோடு நாமல் வெல்வது இலகுவானது என்பது மஹிந்தவின் நினைப்பு. அதற்காக. ரணில் இப்போது எந்தப் பக்கம் இழுத்தாலும் அந்தப் பக்கத்துக்குச் செல்வதற்கு அவர் தயாராக இருக்கிறார்.

இப்படியான சூழலை பயன்படுத்திக் கொண்டு. தன்னுடைய வாழ்நாள் கனவான ஜனாதிபதி தேர்தலில் வென்றுவிட வேண்டும் என்பதை ரணில் நிறைவேற்றிக் கொள்ள நினைக்கிறார். அதற்காக. அவர் மக்களின் ஜனநாயக உரிமை. எதிர்காலம் என்று எதனை வேண்டுமானாலும் பலிகொடுக்க தயாராக இருக்கிறார். ஒரு காலத்தில் தன்னை ஜனநாயக விரும்பியாக காட்டிய ரணில். இன்றைக்கு ஜனாதிபதி பதவிக்காக சர்வாதிகாரியாக மாறி ஆடிக்கொண்டிருக்கிறார்.

**மலரவன் ஜெ.**

04ஆம் பக்கத் தொடர்ச்சி...

இலங்கை ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்துவிட்ட வன்முறைகள், படுகொலைகள் எண்ணிக் கையற்ற இளைஞர், யுவதிகளை மனிதப் புதைகுழிக்குள் தள்ளியது. பாடசாலை மைதானங்கள், வைத்தியசாலைகள் எனப் பல இடங்களிலும் மனிதப் புதைகுழிகளை உருவாக்கி உள்ளார்கள். 75 வருடங்களுக்குள் அவை மறைக்கப்பட்டும் மறக்கப்பட்டும் போயின. ஆயினும், அவ்வாறு புதைக்கப்பட்ட வரலாறுகளை அந்த ஆன்மாக்கள் அவ்வப்போது பேசிக்கொள்வதை எந்த ஆட்சியாளராலும் தடுக்க முடியாது. மனிதப் புதைகுழிகளைக் கையாளும்போது அது தொடர்பாக இருக்கின்ற மிகப்பெரிய சாவல்களில் ஒன்று, பாரிய மனிதப் புதைகுழிக்கென சர்வதேச வரைவிலக்கணம் என்று எதுவுமே இல்லை. அல்லது குறைந்தது எத்தனை பேர் புதைக்கப்பட்டிருத்தல் அது மனிதப் புதைகுழி என்பது உட்பட சட்டரீதியான எந்தவொரு கருத்தொற்றுமையும் கூட கிடையாது.

மனிதப் புதைகுழி எனப்படுவது ஒன்றைவிட அதிகமான படுகொலை செய்யப்பட்டவர்களின் உடலங்கள் இருந்தாலே அது பாரிய மனிதப் புதைகுழிதான். இருப்பினும், 'பல மனிதர்களின் உடல் எச்சங்களைக் கொண்ட, பெரும்பாலும் ஒன்றுடன் ஒன்று கலக்கப்பட்ட நிலையில் புதைக்கப்பட்ட அகழி, குழி, ஒழுங்கமைக்கப்பட்ட அல்லது பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, அத்துடன் பல்வேறுபட்ட உடல் எண்ணிக்கைகளையும் கொண்டு அவர்களை மறைப்பதற்குக் குழி தோண்டி மறைப்பு செய்யப்பட்ட அல்லது புதைக்கப்பட்ட இடங்களே' பாரிய மனிதப் புதைகுழிகள் என தடயவியல் வல்லுநர்கள் வரையறுத்துள்ளனர்.தமிழ் இன அழிப்பின் இனப் படுகொலைகளின் இன்னுமொரு சாட்சியம் கொண்ட ஒரு மனித உரிமை மீறல் புதைகுழி எனச் சொல்லமுடிகிறது.

மனிதப் புதைகுழிகளில் 1983ஆம் ஆண்டிலிருந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் ஏதாவது ஒரு வகையில் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டிருக்கலாம் என்றும் இலங்கையில் பல்வேறு காலப் பகுதிகளில் பாரிய மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டது. இலங்கையில் மனித புதைகுழிகள், கொலைகள் தொடர்பாக நடத்தப்பட்ட பல விசாரணைகள் பகிரங்கப்படுத்தப்படாமலேயே இருக்கின்றன. பல படுகொலைகள் தொடர்பான புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டும் அவை அகழப்படாமல் இருந்து வருகிறது.

இலங்கையில் கடந்த 40 வருட காலமாக அடையாளம் காணப்பட்ட சுமார் 20 மேற்பட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பிலான விசாரணைகளை பௌத்த சிங்களப் பேரினவாத அரசு முன்னெடுக்கவில்லை. நான்கு தசாப்த கால பௌத்த சிங்கள பேரின வாத அரசினால் பலர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களே இந்த புதைகுழிகளில் புதைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வருகின்றது.

1983ம் ஆண்டு முதல் 2009ம் ஆண்டு வரையான காலப் பகுதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கானோரின் உடலங்களைக் கொண்ட பாரிய மனிதப் புதைகுழிகள் காணப்படுகின்றது. இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கண்டுபிடிக்கப்படாமல் இருப்பதில் உலகளவில் இலங்கை இரண்டாவது இடத்திலுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை கூறுகிறது. அந்தளவிற்கு நாட்டில் நிலைமை மோசமாக உள்ளது என்பது வெட்ட வெளிச்சமாகிறது.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட புதைகுழிகள் உட்பட இன்னும் பல நூற்றுக்கணக்கான மனிதப் புதைகுழிகள் காணப்பட வாய்ப்புகள் உள்ளதாக அஞ்சப்படுகிறது. அவற்றில் பல்லாயிரக்கணக்கானவர்கள் பல சித்திரவதைகளின் பின் படுகொலை செய்யப்பட்ட உடலங்கள் புதையுண்டிருப்பதை கடந்தகால நிகழ்வுகள் உறுதி செய்கின்றது. இந்த புதைகுழிகள் தொடர்பில் சர்வதேச கண்துடைப்புக்காகச் சிங்கள அரசினால் விசாரணைகளை நடத்துவதற்காக அமைக்கப்பட்ட ஏராளமான விசாரணை ஆணைக்குழுக்களும் தனது கடமையைச் சரிவர முன்னெடுக்கவில்லை.

உண்மையை வெளிக்கொண்டு வரும் முயற்சிகள் தடைப்பட்டுள்ளன. நீதிபதிகளும், தடயவியல் நிபுணர்களும் திடீர் இடமாற்றங்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். நீதிமன்ற உத்தரவுகளை நிறைவேற்றுவதை காவல்துறை தாமதப்படுத்தியுள்ளது. குடும்பங்களின் வழக்கறிஞர்கள், ஊடகவியலாளர்கள் புதைகுழிகள் உள்ள இடங்களுக்கு போவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. தற்போது உயிருடன் உள்ள சாட்சிகளைக் கண்டறிவதற்கு எந்தவொரு தரவுகளும் சேகரிக்கப்படவில்லை.

மனிதப் புதைகுழிகள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பது தொடர்பில் அதற்கான அரசியல் திடசங்கற்பம் முற்றாக இல்லை. இதுவரையில் ஆங்காங்கே மனிதப் புதைகுழிகளில் 20 மாத்திரமே அகழ்வுப் பணிகள் நடத்தப்பட்டுள்ளன. அவற்றிலும் அதிகமானவை முழுமையான அகழ்வு நடைபெறாமல் இடைநிறுத்தப்பட்டுள்ளது இந்த குற்றங்களை ஆவணப்படுத்துவது, ஆதாரங்களைச் சேகரிப்பது மற்றும் அதைப் பாதுகாப்பது மிகப்பெரும் சவாலான விடயமாகவே இருந்து வருகிறது.

தமிழர் தாயகத்தில் தமிழர் பூர்வீகமாக வாழ்ந்த ஈழ தேசத்து ஊரை பௌத்த சிங்கள இராணுவத்தினர் ஆக்கிரமித்த பின்னரும், இனப்படுகொலை அரசை நம்பி நம்பிக்கையுடன் தமது சொந்த ஊர் திரும்பும் தமிழ் மக்களின் உணர்வை விவரிக்க முடியாது. 2009ம் ஆண்டிற்கு முன்னர் இலங்கை அரசின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் போது கைது செய்யப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டார்கள். இராணுவ சோதனைச் சுற்றிவளைப்பின் போது காணாமல் ஆக்கப்பட்டார்கள்.






வெள்ளை வானில் கடத்திச்சென்று காணாமல் ஆக்கப்பட்டவர்கள். அதேவேளை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழ்ந்த தமிழர்களின் வீடுகளில் வைத்து விசாரணை என அழைத்துச் செல்லப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டார்கள். தடுப்புக்காவலின் கீழ் சித்திரவதை, ஒரு தொடர்ச்சியான சர்வாதிகாரச் செயல்முறையின் பின்னர் பெறப்பட்டிருந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் காணாமல் ஆக்கப்பட்டார்கள்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தாங்களாகக் காணாமல் போகவில்லை. படையினரால் கைது செய்யப்பட்ட பின் காணாமல் போயுள்ளனர். பலரை உறவினர்களே படையினரிடம் நேரடியாகக் கையளித்தும் உள்ளனர். இதற்கு வலுவான சாட்சியங்களும் உண்டு. 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் மதகுருமாருடன் இராணுவத்திடம் சரணடைந்த போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள். வடக்குக் கிழக்கில் இலங்கை இராணுவம் மற்றும் துணை இராணுவக் குழுவினரால் கைது செய்யப்பட்டும் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள். 2009 யுத்தத்தின் போது சர்வதேசத்தையும் அதன் சட்டவிதிகளையும் நம்பிக் கையளித்த உறவுகள் 'தம்மால் கையளித்த உறவுகள் எங்கே? அவர்களுக்கு என்ன ஆனது?' என்ற பொறுப்புக்கூறலினை சர்வதேசத்திடம் கோரி இரவு, பகலாக வீதியோரத்தில் முன்னெடுத்து வரும் அறவழி சாத்வீகப் போராட்டமானது 2415 நாட்களைத் தொட்டுள்ள நிலையில் நீதி கோரி தொடர்ச்சியாகத் தாயகத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சர்வதேசத்தின் கவனத்தை ஏற்படுத்தும் முகமாக நீதிக்கான கவனயீர்ப்புப் போராட்டம் மற்றும் பேரணிகளும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட வர்கள் உயிரிழந்துவிட்டார்கள். அவர்களைத் தேடித் தருமாறு அவர்களது உறவினர்கள் போராட்டம் செய்வதில் பயனில்லை' என கோட்டாபய ராஜபக்சே சனாதிபதியாக இருந்தபோது அலட்சியமாகக் கூறினார். காணாமல் போனோருக்கான அலுவலகமொன்று ஸ்தாபிக்கப்பட்டாலும், அதன் செயற்பாடுகள் வெற்றியளிக்கவில்லை. மாறாக, காணாமல் போனோரின் உறவினர்களுக்கு இழப்பீடும் மரண சான்றிதழ்களும் வழங்கப்படும் என அரசாங்கம் இந்த விவகாரத்தை மூடி மறைக்கவே பார்த்தது.

காணாமல் ஆக்கப்பட்ட, சரணடைந்த தங்கள் பிள்ளைகளை தேடும் ஆயிரக்கணக்கான தாய்மார்கள் தங்கள் பிள்ளைகள் எங்காவது உயிருடன் இருந்துவிடமாட்டார்களா என்ற ஏக்கத்தில் மரணிப்பதற்கு முன் அவர்களைப் பார்த்துவிடமாட்டோமா என்ற ஆசையில் 14 ஆண்டுகள் கடந்து வீதிகளிலும், அரச அலுவலகங்களிலும், மனித உரிமை ஆணைக்குழுக்களிலும், விசாரணைக் குழுக்களுக்கு முன்பாகவும் சாட்சியமளித்து வருகின்றார்கள். கடந்த நான்கு தசாப்தங்களில் சுமார் 20 - 30க்கும் மேற்பட்ட பாரிய மனிதப் புதைகுழிகளைத் தோண்டியதில் ஒவ்வொன்றிலும் நூற்றுக்கணக்கான எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டபோதிலும், அது குறித்து எந்த நடவடிக்கையும் அரசு எடுக்கவில்லை. இலங்கை அரசாங்கங்களால் நிறுவப்பட்ட பல விசாரணை ஆணைக்குழுக்கள், பாரிய புதைகுழிகள் பற்றி ஆராயக் கட்டளையிடவில்லை என்பதுடன் உண்மையை வெளிக்கொண்டுவரும் முயற்சிகளையும் கையாளவில்லை.

மனித புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டபோது, நீதிபதிகள் மற்றும் தடயவியல் நிபுணர்கள் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டதுடன், குடும்பங்களிற்கும் சட்டத்தரணிகளுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் அவற்றை உரிய முறையில் இனம் காண்பதற்கும் முழுமையான தகவல்களை வெளிக் கொண்டுவருவதற்கு, ஆவணப்படுத்தி இன அழிப்பின் சாட்சியங்களை திரட்டுவதற்கும் இடமளிக்கப்படவில்லை. உயிருள்ள சாட்சிகளைக் கண்டுபிடிக்க எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பதுடன், பிரேதப் பரிசோதனைதரவுகள்சேகரிக்கப்படவில்லை. இதேவேளை மனித புதைகுழி தொடர்பான தரவுகளைத் தொடர்ச்சியாக அழித்துவரும் குற்றச்சாட்டு குறித்து உரிய விசாரணைகளை மேற்கொள்ளப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் பகுதியில் மட்டும் துரையப்பா விளையாட்டு அரங்கம், செம்மணி மனிதப் புதைகுழி, மிருசுவில் மனிதப் புதைகுழி என மூன்று மனிதப் புதைகுழி இடங்கள் காணப்படுகின்றன. அதேபோல் கணேசபுரம் மனிதப் புதைகுழி (கிளிநொச்சி), புதுக்குடியிருப்பு மனிதப் புதைகுழி (முல்லைத்தீவு), திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி (மன்னார்) உள்ளிட்ட பகுதிகள் தவிர, குருநாகல், கம்பஹா, கொழும்பு, மாத்தறை, இரத்தினபுரி, மட்டக்களப்பு, மாத்தளை மற்றும் கண்டி ஆகிய இடங்களிலும் இந்த மனிதப் புதைகுழிகள் காணப்படுகின்றன. அதேபோல் கணேசபுரம் மனிதப் புதைக்குழி (கிளிநொச்சி), புதுக்குடியிருப்பு மனிதப் புதைகுழி (முல்லைத் தீவு), திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைக்குழி (மன்னார்) உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட மனிதப் புதைகுழிகள் இனங்காணப்பட்டுள்ளது. இப் புதைகுழி பல நூற்றுக்கணக்கில் இலங்கை முழுவதும் இருக்கும். குறிப்பாக இராணுவ முகாம்கள் மற்றும் இரகசிய சித்திரவதை முகாம்கள் நிறைந்த பகுதிகளில் அதிகமானவை உள்ளன. வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டவர்களின் புதைகுழிகள் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

துரையப்பா விளையாட்டு அரங்கு மனிதப் புதைகுழி, யாழ். கோட்டைக்கு அருகில் சிங்கள இராணுவ முகாம் அமைக்கப்பட்டுவரும் இடத்தில் மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அப்பகுதியில் தொல்லியல் திணைக்களத்தினால் மேற் கொள்ளப்படும் ஆய்வு நடவடிக்கைகளின் போது அகழப்பட்ட குழியொன்றினுள் இருந்தே இந்த மனித எலும்புக்கூட்டுத் தொகுதி கண்டுபிடிக்கப்பட்டது.

**தொடரும்...**

# விளையாட்டு



## 48 வருட உலகக் கிண்ண வரலாற்றில் முதல் சாதனை

நாணய சுழற்சியை வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ஆரம்பமே அதிரடியாக தொடங்கினார் வார்னர். ஒரே ஓவரில் 4 பவுண்டரிகள் அடித்து அசத்திய வார்னரின் வேகம் சதத்தில்தான் முடிந்தது. வார்னர் 104 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க அடுத்து வந்த ஸ்மித். லபுஷேன் 71. 62 ஓட்டங்கள் முறையே எடுத்தனர்.

இந்நிலையில் 40 பந்துகளில் சதமடித்து அசத்தினார் மேக்ஸ்வெல். 44 பந்துகளில் 106 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார் மேக்ஸ்வெல். இதில் 9 பவுண்டரிகள் 8 சிக்ஸர்கள் அடங்கும். மற்ற பேட்டர்களான மிட்செல் மார்ஷ் 9. கிரீன் 8. கம்மின்ஸ் 12. இங்கிலிஸ் 14 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தனர். அவுஸ்திரேலிய அணி 50 ஓவர் முடிவில் 399/8 ஓட்டங்கள் எடுத்தது. நெதர்லாந்தின் வான் பீக் 4 விக்கெட்டுகள் எடுத்து அசத்தினார். 400 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்குடன் அடுத்து ஆடிய நெதர்லாந்து அணி 21 ஓவர் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 90 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. ஆடம் ஜாம்பா 4 விக்கெட்டுகள் எடுத்து அசத்தினார். அதிகபட்சமாக விகரம்ஜித் சிங் 25 ஓட்டங்கள் எடுத்தார். இதன் மூலம் அவுஸ்திரேலிய அணி 309 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. 48 வருட உலகக் கிண்ண வரலாற்றில் இவ்வளவு ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற முதல் அணியாக ஆஸ்திரேலிய அணி வரலாற்று சாதனை படைத்துள்ளது.

## இந்திய வீராங்கனை சீத்தல் தேவி தங்கப் பதக்கம் வென்றார்

"ஆசிய பரா விளையாட்டு போட்டிகள் சீனாவில் நடைபெற்று வருகின்றன. வில்வித்தை போட்டியில் பெண்களுக்கான தனிநபர் காம்பவுண்ட் பிரிவில் இந்திய வீராங்கனை சீத்தல் தேவி கலந்து கொண்டார். இவர் சிங்கப்பூர் வீராங்கனை அலிம் நுர்-ஐ வீழ்த்தி தங்கப்பதக்கம் வென்றார். சீத்தல் தேவி 144-142 என வெற்றி பெற்றார்.

இதற்கு முன்னதாக 72 பதக்கங்கள் வென்றிருந்த நிலையில். தற்போது அதிக பதக்கங்களை வென்றுள்ளது. கடந்த 2018-ல் இந்தியா 15 தங்கம். 24 வெள்ளி. 33 வெண்கலம் என 72 பதக்கங்கள் வென்றிருந்தது.



## இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் பிஷன் சிங் காலமானார்



இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் பிஷன் சிங் பேடி 77 வயதில் காலமான சம்பவம் ரசிகர்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்திய கிரிக்கெட் வரலாற்றில் சிறந்த லெக் ஸ்பின்னர்களில் ஒருவர் பிஷன் சிங் பேடி. 1966ஆம் ஆண்டு முதல் இந்திய அணிக்காக விளையாடி வந்த பிஷன் சிங் பேடி, 1979ஆம் ஆண்டு வரை விளையாடியவர். இந்திய அணிக்காக 67 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 266 விக்கெட்டுகளையும், 10 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 7 விக்கெட்டுகளையும் வீழ்த்தியவர்.

1971ஆம் ஆண்டு இங்கிலாந்து அணிக்கு எதிரான வரலாற்று சிறப்புமிக்க டெஸ்ட் தொடரில் இந்திய அணி வென்றதற்கு முக்கியமான காரணமானவர். கேப்டன் அஜித் வடேகர் காயம் காரணமாக வெளியேறியதால், இந்திய அணியின் கேப்டனாக பிஷன் சிங் பேடி செயல்பட்டார். இவரது கேப்டன்சியில் இந்திய அணி சர்வதேச கிரிக்கெட்டில் உச்சம் தொட்டது என்றே சொல்லலாம்.

இந்திய அணி தனது முதல் ஒருநாள் வெற்றியை ஈஸ்ட் ஆப்பிரிக்கா அணிக்கு எதிராக 1975 உலகக்கோப்பை தொடரில் பெற்றது. அந்த போட்டியில் 12 ஓவர்கள் வீசி வெறும் 6 ரன்கள் மட்டுமே விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டை கைப்பற்றினார். அதேபோல் அம்ரிஸ்தரில் பிறந்தாலும் டெல்லி அணிக்காக உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்றார். இதன் மூலமாக முதல்தர கிரிக்கெட்டில் 370 போட்டிகளில் விளையாடி 1,560 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

அதேபோல் டெல்லி அணிக்கு கேப்டனாக இருந்து இரு முறை ரஞ்சி டிராபி தொடரில் கோப்பையை வென்றுள்ளார். இவரது மகள் அங்கத் பேடி இந்தி சினிமாவில் நடித்து வருகிறார். ஓய்வுக்கு பின் பிஷன் சிங் பேடி தனது மகன் மற்றும் மருமகள் நேஹா தூபியாவுடன் இருந்தார். இந்த நிலையில் பிஷன் சிங் பேடி உயிரிழந்திருப்பது ரசிகர்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கலும் கௌரவிப்பு நிகழ்வும்

மருதமுனை மனாரியன் 88 அமைப்பின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் "மருதமுனை இளைஞர் விளையாட்டுகழகங்களுக்கு உதவுவோம்" எனும் செயற்திட்டத்தின் கீழ் மருதமுனையிலுள்ள விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்ற நிகழ்வு மனாரியன் 88 அமைப்பின் பிரதான செயற்பாட்டாளர் ஐ.எல். முக்தார் அவர்களினால் முன்னெடுக்கப்படுகின்றன.

இது தொடர்பாக மருதமுனை B4U வேரிஸ் விளையாட்டு கழகம் மற்றும் பர்வின் ரெடிங் மற்றும் லதான் அக்ரோ இன்டர்நேஷனல் ஆகிய நிறுவனங்களின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அல்-ஹாஜ் கலீல் முஸ்தபா அவர்களுடன் கலந்துரையாடல் மருதமுனை ஆத்தியடி தோப்பில் இடம் பெற்றது. இதன்போது மருதமுனை B4U வேரிஸ் விளையாட்டு கழகம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள். சவால்கள் மற்றும் கழக கட்டமைப்பு. முன்னேற்றம் மற்றும் எதிர்கால அபிவிருத்திகள் என்பன போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதுடன். விளையாட்டு கழக வளர்ச்சிக்கு உதவும் நோக்குடன் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் இந்நிகழ்வில் மருதமுனை இளைஞர் கழகங்களுக்கு உதவுவோம் என்னும் செயற்திட்டத்திற்காகவும். அல் ஹாஜ் கலீல் முஸ்தபா அவர்களை கௌரவிக்கும் வகையில் B4U வேரிஸ் விளையாட்டு கழகத்தினரால் நினைவுச்சின்னம் கொடுத்து கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை B4U வேரிஸ் விளையாட்டுக் கழகத்துக்கு வழங்கிய அல்-ஹாஜ் கலீல் முஸ்தபா மற்றும் மனாரியன் 88 பிரதான செயற்பாட்டாளர் ஐ.எல்.முக்தார் ஆகியோருக்கு நன்றிகளையும். பாராட்டுக்களையும் தெரிவித்தார்கள்.

(நூருல் ஹுதா உமர்)

## சர்வதேச பீடே ரேட்டிங் செஸ் – பிரதீப்குமார் சாம்பியன்



"மவுண்ட் செஸ் அகாடமி சார்பில் எம்.எஸ்.வெங்கடராமன் நினைவு 8-வது சர்வதேச பீடே ரேட்டிங் செஸ் போட்டி சென்னையில் உள்ள நியூபிரின்ஸ் பவானி என்ஜினீயரிங் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் நடந்தது. இதில் தபால்துறையை சேர்ந்த பிரதீப்குமார் 7.5 புள்ளிகள் பெற்று சாம்பியன் பட்டம் பெற்றார். அஜேஷ், செல்வமுருகன், ராம்குமார், நாராயணன், உமாசங்கர், ஹரிதேவ் ஆகியோர் தலா 7 புள்ளிகள் பெற்று 2 முதல் 7-வது இடங்களை பிடித்தனர்.

கல்லூரியின் துணை தலைவர் நவீன் பிரசாத் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். முதல் இடத்துக்கு ரூ.50 ஆயிரம் வழங்கப்பட்டது. மொத்தம் ரூ.5 லட்சம் பரிசு தொகை வழங்கப்பட்டது. செயலாளர் மகாலட்சுமி, செங்கல்பட்டு மாவட்ட செஸ் சங்க செயலாளர் புவனா, போட்டி அமைப்புக்குழு செயலாளர் யமுனா ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.

## வெள்ளிப் பதக்கம் வென்ற சமித துலான்



2023 ஆசிய பரா விளையாட்டுப் போட்டியில் இலங்கை வீராங்கனை சமித துலான் வெள்ளி பதக்கம் ஒன்றை வென்றுள்ளார். ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் F64 பிரிவில் கலந்துகொண்டு சமித துலான் குறித்த வெள்ளி பதக்கத்தை வென்றுள்ளார்.

ஈட்டி எறிதல் போட்டியில் சமித துலான் 64.09 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரக்பி உலகக் கிண்ணம் - மூன்றாம் இடத்தை பிடித்த இங்கிலாந்து

2023 ரக்பி உலகக் கிண்ண காலிறுதிப் போட்டியில் அர்ஜென்டினாவை வீழ்த்தி இங்கிலாந்து வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளது. அதன்படி, பலம் வாய்ந்த இங்கிலாந்து அணி 26க்கு 23 என்ற புள்ளிகள் கணக்கில் அர்ஜென்டினாவை வீழ்த்தி 2023 ரக்பி உலகக் கோப்பையில் மூன்றாவது இடத்தை பிடித்துள்ளது.



# உலக வலம்

## சீனா முன்னாள் பிரதமர் மரணம்



"சீனாவின் முன்னாள் பிரதமர் லீ கெகியாங் (வயது 68). 2013-ம் ஆண்டு முதல் 2023-ம் ஆண்டு மார்ச் மாதம் வரை பிரதமராக இருந்தார். இந்த நிலையில் கெகியாங், மாரடைப்பால் உயிரிழந்தார்.

ஷாங்காய் நகரில் வசித்து வந்த அவருக்கு திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டு உயிர் பிரிந்தது. பொருளாதார வல்லுநரான இவர், பல சீர்திருத்த நடவடிக்கைகளை எடுத்தார். சீனாவின் தலைமைப் பொருளாதார அதிகாரியாக பத்து ஆண்டுகள் பணியாற்றினார். 1955-ம் ஆண்டு அன்ஹுய் மாகாணத்தில் பிறந்த லீ கெகியாங், ஒரு கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராகத் தொடங்கி அரசியலில் நுழைந்தார். அவர் பீக்கிங் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார்.

கம்யூனிஸ்ட் இளைஞர் கழகத்தில் ஈடுபட்டார். அவர் 1994-ல் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம் பெற்றார். அவர் மாகாண பதவிகள் மற்றும் அமைச்சகங்களில் பணியாற்றிய பிறகு 2007-ல் கட்சியின் மத்திய குழுவில் சேர்ந்தார். சீன அதிபர் ஜி ஜின்பிங்கின் நம்பிக்கைக்குரிய தலைவர்களில் ஒருவராக லீ கெகியாங் இருந்தார்.

## இந்திய கடற்படை அதிகாரிகள் 8 பேருக்கு மரண தண்டனை



இந்திய கடற்படையில் பணியாற்றி ஓய்வுபெற்ற 8 இந்தியர்களுக்கு கத்தாரில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. கத்தாரில் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்த 8 முன்னாள் இந்திய கடற்படை அதிகாரிகள் கடந்த ஆண்டு (2022) தோஹாவில் கத்தார் உளவுத்துறையால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 8 இந்தியர்களுக்கு கத்தார் நாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. உளவு பார்த்த முறைப்பாட்டில் கத்தார் நீதிமன்றம் 8 இந்தியர்களுக்கும் மரண தண்டனை விதித்துள்ளது. இந்த தண்டனை தொடர்பில் தகவல் அறிந்த இந்திய அரசாங்கம் அதிர்ச்சியடைந்துள்ளது.

மேலும், முன்னாள் கடற்படை வீரர்கள் 8 பேரையும் விடுதலை செய்வதற்கான சட்ட வழிமுறைகளை மேற்கொள்ள உள்ளதாகவும் இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது. குற்றம் சாட்டப்பட்டுள்ள 8 இந்தியர்களும் கடந்த ஆண்டு ஒகஸ்ட் முதல் தனிமைச்சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதே வேளை, 8 இந்தியர்களும் பணி புரிந்த நிறுவனம் நீர்மூழ்கி கப்பல்கள் தொடர்பான திட்டத்தில் இணைந்திருந்தது.

## அமெரிக்க பாராளுமன்ற சபாநாயகராக மைக் ஜான்சன் தேர்வு



கனடாவில் வெறுப்புணர்வை தூண்டும் குற்றச் செயல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இஸ்ரேல் - ஹமாஸ் போர் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இவ்வாறு அதிக எண்ணிக்கையிலான வெறுப்புணர்வு குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது. டொரண்டோ போலீசார் இது தொடர்பிலான தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

வெறுப்புணர்வை தூண்டும் குற்றச்செயல்கள் தொடர்பில் வழமையாக கிடைக்கும் தொலைபேசி முறைப்பாடுகளை விடவும் தற்பொழுது அதிக எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதாக போலீசார் தெரிவிக்கின்றனர். குறிப்பாக இஸ்ரேல் - ஹமாஸ் போர் ஆரம்பமானதன் பின்னர் இந்த தொலைபேசி வழி முறைப்பாடுகளின் எண்ணிக்கை 132 வீதத்தினால் அதிகரித்துள்ளது. சில சந்தர்ப்பங்களில் கொலை மிரட்டல் விடுக்கும் அளவிற்கு இந்த வெறுப்புணர்வு குற்ற செயல்கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனவரி மாதம் முதல் இந்த மாதம் 7ம் திகதி வரையில் வெறுப்புணர்வு தொடர்பிலான 237 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாகவும், கடந்த ஆண்டில் இதே காலப்பகுதியில் 192 சம்பவங்கள் மட்டுமே இடம்பெற்றிருந்தன என தெரிவிக்கப்படுகிறது. போர் பதற்றம் ஆரம்பமானதன் பின்னர் டொரன்டோ போலீசார் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.நா பொதுச்செயலாளர் இராஜினாமா செய்யவேண்டும்



இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாதிகள் கடந்த 7-ம் திகதி திடீரென தாக்குதல் நடத்தினர். அத்துடன் பலர் பிணைக் கைதிகளாக பிடிக்கப்பட்டுள்ளனர். இதற்கு இஸ்ரேல் காசா மீது ஏவுகணைகளை வீசி பதிலடி கொடுத்து வருகிறது. இதனால் இரு பக்கமும் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது. 18-வது நாள் தாக்குதலுக்குப் பிறகு இருதரப்பிலும் பலி எண்ணிக்கை 7 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலில் ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் பேசும்போது, இஸ்ரேலின் தொடர் குண்டு வீச்சு பெரும் அபாய ஒலியை ஏற்படுத்துகிறது. சர்வதேச மனித உரிமை சட்டம் இப்போரில் மீறப்படுவது வருத்தம் அளிக்கிறது. 10 லட்சத்துக்கும் மேற்பட்டோரை வடக்கு காசாவில் இருந்து தெற்கு காசாவுக்கு இடம் பெயர கூறிவிட்டு அங்கேயும் இஸ்ரேல் குண்டு வீசுகிறது. 56 ஆண்டுகளாக பாலஸ்தீன மக்கள் ஆக்கிரமிப்பு, உள்ளிட்டவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். காரணங்களின்றி ஹமாஸ் இஸ்ரேலை தாக்கவில்லை.

ஹமாஸ் தாக்குதலுக்காக பாலஸ்தீன மக்களுக்கு தண்டனை வழங்குவதை நியாயப்படுத்த முடியாது என தெரிவித்தார். குட்டரெசின் இந்த கருத்துக்கு இஸ்ரேல் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக, ஐ.நாவுக்கான இஸ்ரேல் தூதர் கிலாட் இர்டான் கூறுகை யில், "ஹமாஸ் தாக்குதலை ஐ.நா பொதுச் செயலாளர் பொறுத்துக்கொண்டு நியாயப்படுத்துகிறார். அவர் பதவி விலக வேண்டும்" என்றார். அதேபோல், ஐ.நா. பொதுச்செயலாளர் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று இஸ்ரேல் மந்திரி கோஹன் கூறினார்.

## உலகின் மிக வயதான நாய் உயிரிழப்பு



உலகின் மிக வயதான நாய் (23) உயிரிழந்தது. போர்த்துகல் லீரியாவை சேர்ந்த பாபி (வயது 31) என்ற நாய் உயிரிழந்துள்ளது.

இதனை கால்நடை மருத்துவர் வைத்தியர் கரேன் பெக்கர் சமூக வலைதளத்தில் அறிவித்தார். பாபி மிகவும் வயதான நாய் என்ற கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஈரானில் இரு பெண் பத்திரிகையாளர்களுக்கு 07 ஆண்டுகள் சிறை



ஈரானில் இரு பெண் பத்திரிகையாளர்களுக்கு ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பொலிஸ் காவலில் உயிரிழந்த மாஷா அமீனி தொடர்பான செய்தியை வெளியுலகுக்குக் கொண்டுவந்தவர்களில் குறிப்பிடத் தக்கவர்களான இவர்கள் மீது அமெரிக்க அரசுக்கு 'ஒத்துழைப்பு' அளித்தது உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஈரானின் சர்ச்சைக்குரிய ஆடைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட குர்து இனத்தைச் சேர்ந்த மாஷா அமீனி என்ற பெண், கடந்த ஆண்டு செப்டம்பரில் பொலிஸ் காவலில் இருந்தபோது உயிரிழந்தார். தலையை மறைக்கும் வகையிலான ஆடையைச் சரியாக அணியாததால் மாஷா அமீனியை காவலர்கள் கைது செய்தார்கள் என்ற செய்தியை நிலோஃபர் ஹமேதியும், மாஷா அமீனியின் இறுதிச்சடங்கு தொடர்பான செய்தியை எலாகே முகமதியும் வெளியிட்டனர். மாஷா அமீனியின் மரணம் ஈரானில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இதையடுத்து, கடந்த ஆண்டு செப்டம்பரில் கைது செய்யப்பட்ட பத்திரிகையாளர்கள் இருவரும் ஓராண்டாக சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். அமெரிக்க அரசுக்கு ஒத்துழைப்பு அளித்தல், தேசியப் பாதுகாப்புக்கு எதிராகச் செயல்படுதல், அரசுக்கு எதிரான பிரசாரம் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் இருவருக்கும் டெஹ்ரான் நீதிமன்றம் ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளதாக நீதித் துறை செய்தி இணையதளமான 'மைஷான்' ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தது.

இந்தத் தண்டனையை எதிர்த்து இருவரும் 20 நாள்களுக்குள் மேல்முறையீடு செய்ய முடியும். இந்தப் பத்திரிகையாளர்கள் இருவருக்கும் பத்திரிகைச் சுதந்திரத்துக்கான விருதை அமெரிக்கா கடந்த மே மாதம் அறிவித்தது குறிப்பிடத்தக்கது.




























இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 29.10.2023 அன்று வெளியிடப்பட்டது.